புகலை மாறியம் அன்றும் இன்றும்


[illegible]

புதுவை மாநிலம்

14

அன்றும் இன்றும்

ஆண்டுகள்




17-2-1969

அணிந்துரை.

புதுவையில் நடக்கவிருக்கும் 1969-ஆம் ஆண்டுக்கான ஐந்தாண்டுத் திட்டக் கண்காட்சியின் ஆரம்பதினத்தன்று புதுவை அரசின் செய்தி, விளம்பரம் மற்றும் சுற்றுலா துறை யினரால் வெளியிடப்படும் "புதுவை மாநிலம் – அன்றும் இன்றும்" என்னும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்நூலின் ஏடுகளைப் புரட்டிப் பார்த்த பின்னர் திட்டமிட்ட வளர்ச்சிக்கான எல்லா துறைகளிலும் அடைந்துள்ள சீரிய முன்னேற்றம் குறித்து இவ்வரசு பூரண திருப்தியடைய போதுமான நியாயமிருக் கிறது என்பதை உணர்கிறேன். இந்நூல், பல பொதுத் துறை களின் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டுள்ள பணிகளைப் படம் பிடித்துக் காட்டுவதன் மூலம், பொது மக்களுக்கு அறி வொளி ஊட்டுவதாக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

நான்காவதுத் திட்டம் துவங்கவிருக்கும் இந்நேரத்தில், இந்நூல் வெளியிடப்படுவதானது, இதுகாறும் நாம் அடைந்துள்ள சாதனைகளைக் கணக்கெடுத்துப் பார்க்கவும் அதன் வாயிலாக, வருகின்ற ஆண்டுகளில் இதனிலும் பெரிய சாதனைகளைப் புரியவும் நமக்குத் துணைபுரியும். மக்களது உள்ளக் கிடக்கைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின், நாம் உயர்ந்த குறிகோளுடனும் பரந்த நோக்கத்துடனும் கடின உழைப்புடனும் செயல்படவேண்டும். இதற்கு, நம்மீதும் நமது நாட்டின் எதிர்காலத்தின்மீதும் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் நாம் முன்னேறிச் செல்லும்பொருட்டு, புதுவை மாநிலத்தின் எல்லா ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து நல்குவார்களென்று நான் எதிர்பார்க்கிறேன்.



(பி. டி. ஜாட்டி,)

புதுவை மாநில ஆளுநர்.

விவசாயம்

புதுவை மாநிலத்தில் விவசாயத்துறை இணைப்பிற்குப் பின்னர் அதாவது முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் ஆரம் பிக்கப்பட்டது. எனவே, முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் விவசாயத்துறையில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்பட முடியாமல் போய்விட்டது. விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்க வும் வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டதே இரண்டாவது, மூன்றாவது திட்டகாலத்தில் தான். இம்மாநிலத்தை உணவு தானிய உற் பத்தியில் தன்னிறைவு அடையச் செய்யும் வகையில் பெரும் அளவு முயற்சி மேற்கொள் ளப்பட்டது இயற்கையேயாகும்.

இரண்டாவது திட்டகாலத்தில் பதினான்கு வகையான அபிவிருத்தித் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு, இவற்றிற்காக ரூ. 13.00 லட்சம் செலவிடப்பட்டது. இதன் பலனாக ஏற் கெனவே ஆண்டொன்றிற்கு 34,700 டன்னாக இருந்த உற்பத்தி அளவு 42,000 டன்னாக அதிகரித்தது.

மூன்றாவது திட்டகாலத்தில் மொத்தம் 23 அபிவிருத்தித் திட்டங்கள் செயலாற்றத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் புதுவையில் ஒன்றும் காரைக்காலில் ஒன்று மாக இரண்டு அரசாங்க விதைப்பண்ணைகள் நிறுவனப்பட்டன. இவையன்றி நிரூபண ஆராய்ச்சிப் பண்ணையொன்றும் பழச்செடி கள் வளர்ப்பு நிலையமொன்றும் நிறுவப்பட் டன. தென்னை அபிவிருத்திக்காக விவசாயி களுக்கு நல்ல தரமான தென்னங்கன்றுகளை விநியோகம் செய்யும் நோக்கத்துடன் புதுவை, காரைக்கால், மாஹே ஆகிய பகுதி களில் மூன்று தென்னை வளர்ப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. மின்சார பம்பு செட்டுகள் மற்றும் டிராக்டர்கள் வாங்கவும், குழாய்க் கிணறுகள் தோண்டவும் விவசாயிகளுக்குக்

கடன் வசதி அளிக்கப்பட்டது. இவையல்லா மல் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் பெரும் அளவில் மேற்கொள்ளப்பட்டன.

உற்பத்திப் பெருக்கத்தில் விவசாயிகள் கண் ணும் கருத்துமாக இருக்கும்வண்ணம் மூன்று வது திட்டகாலத்தில் தீவிர நெல் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இம்மாநிலத் தின் பிரதான வர்த்தகப்பயிராகிய கரும்புச் சாகுபடியும் இத்திட்டகாலத்தில் நல்ல அபி விருத்தி அடைந்தது. மேற்கூறிய திட்டங் களைத் திறம்பட நிறைவேற்றியதன் பயனுக உணவு உற்பத்தி 56,056 டன்னுக உயர்ந்தது. கரும்பு உற்பத்தியோ 4000 டன்னிலிருந்து 1,20,000 டன்னுக ஏற்றமடைந்தது. திட்டப் பணிகளுக்காக மூன்றுவது திட்டகாலத்தில் செலவான மொத்தத் தொகை ரூ. 60.49 லட்ச மாகும்.

சாகுபடியாகும் நிலப்பரப்பினை அதிக மாக்குவதைவிட, தீவிர சாகுபடிமுறைகளைக் கையாண்டு உற்பத்தியை அதிகமாக்குவதே வருடாந்தரத் திட்டத்தின் அடிப்படை அம்ச மாக இருந்தது. இம்மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பாகிய 46,822 ஹெக்டேரில் மூன்று வது திட்ட இறுதிவரையில் சாகுபடி செய்யப் பட்ட நிலப்பரப்பு, புல் வெளிகளாகவும் மர மும் தோப்புகளும் அடர்ந்த பகுதிகளாகவும் தரிசு நிலங்களாகவும் இருந்தன. எனவேதான் சாகுபடி நிலப்பரப்பை அதிகமாக்குவதை விட, தீவிர சாகுபடி முறையில் உற்பத்திப் பெருக்கத்திற்கு இங்கு வழி கோலப்பட்டது. மூன்றுவது திட்டத்தைத் தொடர்ந்து நிறை வேற்றிய வருடாந்தரத் திட்டங்களில் பல வகையான 17 திட்டங்கள் ரூ. 81.62 லட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டன. தீவிர விவ சாயத்திட்டம் இம்மாநிலத்தில் நான்கு பகுதி களிலும் செயல்படுத்தப்பட்டது. இதில் உயர் வளரகத்திட்டமும் பன்முறை போகத்திட்ட மும் அடங்கும்; முறையே 90,000 மற்றும் 15,000 ஏக்கர் நிலங்கள் இவற்றின் கீழ் கொண்டுவரப்பட்டன. கூடுமானவரையில் உர வகைகளும் இவற்றிற்கு நன்கு பயன்படுத்தப் பட்டன. பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கை களின் ஒரு பகுதியாக பயிர்ப்பாதுகாப்பு அணியொன்று அமைக்கப்பட்டது. பயிர்களில்

ஏற்படும் பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப் படுத்தும் வகையில் இவ்வணியின் பணி விவசாயிகளுக்கு இலவசமாக விஸ்தரிக்கப் பட்டு வருகிறது.

ஏனைய வர்த்தக தானியங்களின் உற்பத்திப் பெருக்கத்திற்காகவும் போதிய கவனம் செலுத்தப்பட்டது. விவசாயிகளுக்கு பொறுக்கு மணிலா விதையை விநியோகித்து மணிலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன், புதுவையில் 25 ஏக்கர் நிலப் பரப்பில் மணிலா சாகுபடித்திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டது. மாஹே பகுதியில் பாக்கு மற்றும் மிளகு உற்பத்தியை அபி விருத்தி செய்வதற்காக ஒரு பிரத்தியேக திட்டமும் ஏனும் பகுதியில் தென்னை அபி விருத்திக்காக ஒரு திட்டமும் செயல்படுத்தப் பட்டது. புதுவையில் 1968–69 லிருந்து கரும்பு அபிவிருத்திக்கான திட்டமொன் றும் செயல்பட்டு வருகிறது. இதன் விளைவாக 4000 ஏக்கர் நிலத்தில், கரும்பை எப்படியெல்லாம் சாகுபடி செய்தால் உற்பத்தி அதிகரிக்குமோ அந்த வகையி லெல்லாம் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வாழை, மா, முந்திரி மற்றும் காய்கறிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்ட மொன்றும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உயர்ந்த இன பழச் செடி கள் சகாய விலையில் வழங்கப்படுகின்றன. பழச் சாகுபடியை பெரிய அளவில் மேற் கொள்ளும் விவசாயிகளுக்குக் கடன் வசதி களும் அளிக்கப்படுகின்றன.

காரைப்பகுதியில் மாதூர் என்ற இடத்தில் ஒரு விவசாயப் பயிற்சிப் பள்ளி, இளம் விவ சாயிகளுக்கு விஞ்ஞான முறைகளில் விவசா யம் மற்றும் அது சம்பந்தமான துறைகளில் பயிற்சி அளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. ஆண்டுதோறும் 20 மாணவர்கள் இதில் சேர்ந்து பயிற்சி பெறுகிறார்கள். மண்வள ஆராய்ச்சி நிலையமொன்றும் புதுவையில் 1967–68-ல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. விவ சாயிகளுக்கு மண் வளத்தை ஆராய்ந்து அதற்கு ஏற்ற உரவகைகளைப் பயிருக்கேற்ற வாறு நிர்ணயித்துக் கூறுவதிலும் பாசன நீரின் தன்மையை ஆராய்ந்து சொல்வதிலும் இது இலவசச் சேவை புரியும்.

குழாய்க்கிணறுகள் அமைப்பதன் மூலம் பாசனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக குழாய்க் கிணறுதிட்டமொன்றும் செயலாற்றத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் 1967–68-ஆம் ஆண்டில் குழாய் கிணறு தோண்டும் சாதனங்கள் வாங்கப் பட்டு விவசாயிகளுக்குக் குழாய்க்கிணறுகள் அமைத்துக்கொள்வதற்காக வாடகைக்கு விடப்பட்டது.

மூன்ருவது திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலச்சீர்த்திருத்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவருகிறது. நிலத்தை ஆழ உழுவதற்கும் மண்ணைக் கிளறி விடவும் இத் திட்டத்தின்கீழ் டிராக்டர்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. மண்வளப்பாதுகாப்பு, கரை எழுப்புதல், நீர் சூழ்ந்த பகுதிகளைச் சீர்திருத்துதல் முதலிய பணிகளை நிறைவேற்றுவதற்காக மண் வளப்பாதுகாப்புத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல் இரண்டு வருடாந்திரத் திட்டங்களின் பயனுக உணவு உற்பத்தி மேலும் உயர்ந்து 70,405 டன்னையும் கரும்பு உற்பத்தி 1,50,000 டன்னையும் மணிலா 5,800 லிருந்து 6,200 டன்னையும் எட்டிப்பிடித்தது. இவற்றிற்கான மொத்த செலவு ரூ. 68.00 லட்சம். 1968–69-ல் விவசாய திட்டங்களுக்காக ரூ. 20.19 லட்சம் செலவிடப்படும். இதன் பயனுக உணவு உற்பத்தி ஏற்கெனவே இருந்ததைவிட அதிகப்படியாக 26,500 டன்னும், கரும்பு 20,000 டன்னும், மணிலா 500 டன்னும் பெருகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நான்காவது திட்ட இறுதியில் உணவு தானிய உற்பத்திச் சக்தியானது சுமார் 1,20,000 டன்னுகவும் கரும்பு 2,00,000 டன்னுகவும் மணிலா 12,000 டன்னுகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கூறிய இத்தகைய நடவடிக்கைகளின் பயனுக புதுவை மாநிலம் உணவு விஷயத்தில் தன்னிறைவு நிலையை எய்தியதோடுமட்டுமல்லாமல் உபரி விளைச்சல் நிலையையும் அடைந்திருக்கிறது.

கால்நடைப் பராமரிப்பு

இம்மாநிலத்தின் பொருளாதாரம் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பியிருப்பதால் இங்குள்ள விவசாயிகளுக்குக் கால்நடைகளே பிரதான சொத்தாகும். இணைப்பிற்கு முன்னர் கால்நடைப் பராமரிப்புப்பணி மருத்துவத் துறையின் ஒரு பகுதியாகவே செயல்பட்டு வந்தது. அப்போது, புதுவையில் ஒன்றும் காரையில் ஒன்றுமாக இரண்டு கால்நடை நிலையங்கள் மட்டுமேயிருந்தன. இணைப்பிற்குப் பிறகுதான் அதாவது 1955-ஆம் ஆண்டில் தான் இங்கு ஒரு கால்நடைப் பராமரிப்புத் துறை பிரத்தியேகமாக ஆரம்பிக்கப்பட்டது.

இங்குள்ள கால்நடைகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை ஆடுமாடுகள், குதிரைகள், கழுதைகள், பன்றிகள் ஆகியவையே. கோழி வளர்ப்பில் நாட்டுக் கோழிகளிலிருந்து உயர்ந்த ஜாதிக் கோழிகள் வரையிலும் மற்றும் கின்னிக் கோழிகள், வாத்துகள் முதலியவைகளும் இங்கு பரவலாக உள்ளன. இங்குள்ள கால்நடைகள் கலப்பு இனங்களைச் சேர்ந்தவையாதலின் இவற்றை இனம்பிரித்துக் கூற இயலா.

விவசாயத்துறையைப் போலவே கால்நடைப் பராமரிப்புத்துறையும், முதலாவது திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்படுத்தப்பட்டதாகையால், அத்திட்ட காலத்தில் குறிப்பிடத்தக்க சாதனை எதுவுமில்லை. இரண்டாவதுத் திட்டகாலத்தில் புதுவை, காரைக்கால், மாஹே, ஏனம் ஆகிய நான்கு பகுதிகளிலும் நான்கு கால்நடை மருத்துவ நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. புதுவையிலொன்றும் காரையிலொன்றுமாக இரண்டு நகரும் கால்நடை மருத்துவ நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவைகள் மூலைமுடுக்குகளிலுள்ள கிராமப்புறங்களுக்குச் சென்று அங்குள்ள கால்நடைகளுக்கு உற்ற சேவை செய்து வருகின்றன.

புதுவையிலொன்றும், காரையிலொன்று மாக ஒவ்வொன்றும் ஐந்து நிலையங்களைக் கொண்ட இரண்டு கிராமக் கால்நடைக் கேந் திரங்கள், இயற்கை மற்றும் செயற்கை கருத்தரிப்பு முறைகளின்மூலம் உயர்ந்த ரகக் கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபடுவதற்காக ஆரம்பிக்கப்பட்டன.

பெரும்பாலான கிராமங்களில் கோழி வளர்ப்பு, ஒரு துணைத் தொழிலாகவும் பொழுதுபோக்காகவும் இருந்து வருகிறது. புதுவை மாநிலத்தின் நான்கு பகுதிகளிலும் மொத்தம் நான்கு கோழி வளர்ப்பு நிலையங் கள் ஆரம்பிக்கப்பட்டு ஆங்காங்கு கால்நடை மருத்துவ நிலையங்களுடன் இணைக்கப்பட் டுள்ளன. உயர்ந்த ரக ஆடுகள், செம்மறி ஆடுகள், பன்றிகள் ஆகியவை, பண்ணை வைத் திருப்பவர்களில் தகுதியுள்ளோருக்கு விநி யோகம் செய்யப்பட்டன. கால்நடை யினங் களை உயர்த்துவதே இதன் நோக்கமாகும்.

மூன்றாவது திட்டகாலத்தில் பால், மாமிசம், முட்டை முதலிய உணவுப்பொருள்களின் உற் பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன், மேலும் பல புதிய திட்டங்கள் செயலாற்றத் திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

புதுவையிலுள்ள கிராமக் கால்நடைக் கேந் திரத்துடன் மேலும் நான்கு நிலையங்கள் இணைக்கப்பட்டன. மாஹேயிலோன்றும் ஏனு மிலொன்றுமாக இரண்டு நகர செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்கள் துவக்கப்பட்டன. இயற்கை முறையில் கால்நடைகளை இன அபி விருத்தி செய்ய 15 பொலிக்காளைகள் தகுதி யுள்ளோருக்கு இலவசமாக வழங்கப்பட்டன. கறவை மாடுகளை வாங்குவதற்காக ஒவ்வொரு வருக்கும் ரூ. 500 வீதம் மொத்தம் 177 விவ சாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டது.

தீவன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தீவனப் பயிர் விதைகள், பயிர் நடுவதற்கு வேண்டிய சாதனங்கள், புல்வெட்டும் கருவி கள் ஆகியவை சகாய விலையில் விநியோகிக் கப்பட்டன. வரட்சியான மாதங்களில் அதிகப் படியான பசுந்தழைத் தீவனங்களைத் தீவனக் குழிகளில் வைத்துப் பாதுகாப்பதற்கு விவசா

யிகளை ஊக்குவிக்கும் வகையில் தீவனக் குழி கள் அமைத்துக்கொள்வதற்காக ரூ. 300/– வீதம் சகாய நிதி வழங்கப்பட்டது. மொத் தத்தில் 125 ஏக்கர் நிலம் மூன்ருவது திட்ட காலத்தில், தீவனப் பயிர் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

புதுவையிலுள்ள கால்நடை மருத்துவ நிலையத்தில் ஒரு சிறிய கோழிப் பண்ணை இணைக்கப்பட்டிருக்கிறது. கோழி வளர்ப்பைப் பெரிய அளவில் அபிவிருத்தி செய்யும் நோக் கத்துடன், கரியமாணிக்கத்தில் ரூ. 2.66 லட்சம் செலவில் ஒரு பெரிய கோழிப்பண்ணை யொன்று மூன்ருவது திட்டத்தின்போது நிறு வப்பட்டது.

கோழி வளர்ப்பை மேற்கொள்பவர்களுக்கு அதற்குத் தேவையான சாதனங்கள் வாங்கு வதற்காக ரூ. 50 வீதம் சகாய நிதி வழங்கப் பட்டது. கிராமப் புறங்களில் கோழியினத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், நாட் டுக் கோழிகளுக்குப் பதிலாக உயர் ஜாதிக் கோழிகள் வழங்கப்பட்டன. கிராமப் புறத் தில் அமைக்கப்பட்டிருக்கும் கோழிக் கூண்டு களை விசாலப்படுத்தி அபிவிருத்தி செய்வதற் கும் சகாய நிதி வழங்கப்பட்டது. பன்னி ரண்டு அடைகாக்கும் கருவிகள் பாதி விலை யில் விநியோகிக்கப்பட்டன. 55 நபர்களுக் குக் கோழி வளர்ப்பு மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. கோழிப்பண்ணை அமைப்பதற்காக 61 பேருக் குத் தலா ரூ. 400/– வீதம் கடன் வசதியும் அளிக்கப்பட்டது.

கரியமாணிக்கத்திலுள்ள கோழிப் பண் ணைக்கு அருகாமையில் பன்றி வளர்ப்பு நிலை யம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

மூன்ருவது திட்டத்தின் இறுதி ஆண்டில், கோசாலை அபிவிருத்தித் திட்டம் ஒன்றும் செயலாற்றத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட் டது. ரூ. 6,000/– பெறுமானமுள்ள பத்து கால்நடைகளும் மாட்டுத் தொழுவங்கள் அமைக்க மற்றும் பழுதுபார்க்க ரூ. 5000 மான்யமும் வழங்கப்பட்டன.

கரியமாணிக்கத்திலும் நெடுங்காட்டிலும் இருந்த இரண்டு முதலுதவி நிலையங்கள்

கால்நடை மருத்துவ நிலையங்களாக மாற்றி யமைக்கப்பட்டன. பள்ளூரிலுள்ள ஒரு கால் நடை மருத்துவ நிலையம் நீங்கலாக, மாஹே யில் மேலும் ஒரு முதலுதவி நிலையம் ஆரம் பிக்கப்பட்டது.

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை எளி தில் ஆராய்ந்து அறிவதற்கு உதவும்பொருட்டு மருத்துவப் பரிசோதனை நிலையம் ஒன்றும் புதுவைக் கால்நடை மருத்துவ நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

வருடாந்தரத் திட்டகாலத்தில், இரண்டு கிராமக் கால்நடைக் கேந்திரங்களோடு மேலும் ஒவ்வொரு நிலையம் இணைக்கப்பட் டன. 1967 – 68-ல் கரியமாணிக்கத்தில் செயற்கைமுறைக் கருத்தரிப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. வில்லியனூரில் ஒரு புதிய கோசாலை ஆரம்பிக்கப்பட்டது. கரிய மாணிக்கத்திலுள்ள மாநில கோழிப்பண்ணை மேலும் விஸ்தரிக்கப்பட்டது. பாகூரில் கோழி வளர்ப்பு நிரூபண நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், புதுவையில் திருக்கனூரில் ஒரு கால்நடை மருத்துவ நிலையம் புதிதாக ஆரம்பிக்கப் பட்டது.

மீன் அளம்

புதுவை மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகள் கடற்கரையை ஒட்டியே அமைந்திருப்பதால், மீன்பிடித்தொழிலில் இம்மாநிலம் நல்ல வாய்ப்பினைப் பெற்றிருக்கிறது. எனினும் மீன்பிடித் தொழிலுக்கான பல திட்டங்கள் இங்கு இணைப்பிற்குப் பின்னரே செயலாற்றப்பட்டன. மீன் அளத்துறை மீன் வளத்தையும் அது சம்பந்தமான சில தொழில் நிலையங்களையும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இங்கு ஆரம்பிக்கப்பட்டது.

இத்துறையானது, கடல் மற்றும் உட்பிரதேசங்களின் மீன் அபிவிருத்தியை மேற்கொள்வதிலும் மீனவர்களுடைய சமூக-பொருளாதார நிலையை உயர்த்துவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து, பல திட்டங்களைச் செயலாற்றி உள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக ரூ. 33 லட்சம் செலவில் நிறைவேற்றப்பட்ட இத்திட்டங்களின் பயனாக இம்மாநிலத்தின் வருடாந்தர மீன் உற்பத்தி, 4,500 டன்னிலிருந்து 12,000 டன்னாக உயர்ந்துள்ளது.

இணைப்பின்போது ஒரு விசைப்படகுகூட இங்கு இல்லை. மீனவர்கள், கட்டுமரங்களையும் சாதாரண படகுகளையும் மட்டுமே பயன்படுத்தினர். மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் ஆழ்கடலுக்கு இக்கட்டுமரங்களையும் இத்தகைய படகுகளையும் கொண்டுசெல்வது இயலாத காரியம். எனவே அவர்கள் கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையவேண்டியிருந்தது.

விசைப்படகு கொண்டு மீன்பிடிக்கும் திட்டம், ஆழ் கடலில் மீன்பிடிப்புத்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த 14 ஆண்டு காலத்தில் 28 விசைப்படகுகள் வாங்கப்பட்டு மீனவர்களுக்கும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் மற்றும் சகாய நிதி அடிப்படையில் வழங்கப்பட்டன.

அப்போதெல்லாம் பருத்தி நூலினுலும் ஒருவகை நாரினுலும் செய்யப்பட்ட வலையைக்கொண்டே மீன் பிடித்தனர். இவை சிக்கனமல்லாதவைமட்டும் அல்லாமல் நீடித்து உழைப்பவையுமல்ல. மீன்பிடிச் சாதன விநியோகத்திட்டத்தின் கீழ், 13,356 கிலோகிராம் எடையுள்ள வலுவான வலைபின்னும் நூல் மீனவர்களுக்கு மூன்றில் ஒரு பங்கு சகாய விலையில் வழங்கப்பட்டது. மேலும், மிதப்புகள், பாய்மரத்துணிகள், வலுவான பருத்தி நூல்கள் முதலியவையும் சகாய விலையில் விநியோகிக்கப்பட்டன.

விசைப்படகை இயக்குவதில் பயிற்சிபெற்ற மீனவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும் அவர்களுக்கு நவீன மீன்பிடிப்பு முறைகளைக் கற்றுத்தரவும் தேர்ந்தெடுக்கப்பட்ட மீனவர்கள், அண்டை மாநிலங்களான தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம் போன்ற இடங்களிலுள்ள மீனவர் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டனர். மேலும், எர்ணகுளத்திலுள்ள மத்திய மீனவர் பயிற்சி நிலையத்திற்கும் மேட்டூர் அணையிலுள்ள மீனவர் பயிற்சி நிலையத்திற்கும் கூட மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டனர். இவர்கள் மீனவ வல்லுநர் பயிற்சியையும் விசைப்படகு இயந்திரம் இயக்கும் பயிற்சியையும் உட்பிரதேச மீன்பிடிப்பிற்கான பயிற்சியையும் மேற்கொண்டனர். பயிற்சி காலத்தின்போது இவர்களுக்கு மாதாந்தர உதவிப் பணம் வழங்கப்பட்டது. பயிற்சிக்கான செலவுத்தொகையையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

பிரதேசங்களின் உட்பகுதிகளில் 1,350 ஹெக்டேர் பரப்புள்ள நீர் நிலைகள் இருந்தபோதிலும் விஞ்ஞான முறையில் மீன் வளர்க்கும் பழக்கம் இங்கு இணைப்பிற்கு முன்னர் இல்லை. மீன் அளத்துறை இங்கு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 14 ஆண்டுகாலமாக 850 ஹெக்டேர் உட்பிரதேச நீர் நிலைகள் மீன் வளர்ப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. விரைவாக வளரக்கூடிய நல்ல மீன் குஞ்சுகள் உற்பத்தி இன்று ஒரு ஆண்டிற்கு மூன்று லட்சத்தையும் மிஞ்சிவிட்டது. இந்த மீன் குஞ்சுகள் மீன் அளத்துறைக் குளங்களிலும் ஏரி

களிலும் விடப்பட்டு மீன் வளர்ப்புப் பண்ணை வைத்திருக்கும் தனியார்களுக்கு விநியோகிக் கப்படுகின்றன.

மீன், விரைவில் கெட்டுவிடக்கூடிய பொரு ளாகையால் அதைச் சுகாதார முறையில் பாதுகாப்பதும் பிடிக்கும் இடங்களிலிருந்து விற்பனை இடங்களுக்கு மிக விரைவில் கொண்டு செல்வதும் அத்தியாவசியமாகும். இப்போதுள்ள இந்த வசதி இணைப்பிற்கு முன்னர் இங்கு இல்லை. அதிகப்படியான மீன் களைச் சுகாதார முறையில் பதப்படுத்தும் ஒரு நிலையம் மாஹேயில் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. மீன் பதப்படுத்துவதற்குத் தேவை யான உப்பு சகாய விலையில் வழங்கப்படுகிறது.

புதுவையில் 1967 நவம்பரில் பனிக்கட்டித் தயாரிப்பு மற்றும் குளிர்ப்பதன நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. மாஹேயிலும் ஒரு குளிர்ப்பதன நிலையம் இயங்கி வருகிறது. காரைக்காலில் மற்றொரு பனிக்கட்டி மற்றும் குளிர்ப்பதன நிலையம் நிறுவப்பட்டு வரு கிறது.

மீன் பிடிக்கப்படும் கிராமங்களிலிருந்து விற்பனை இடங்களுக்கு மீன்களை விரைவில் ஏற்றிச்செல்ல ஐந்து மீன் வண்டிகள் மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாடகைக்கு விடப் பட்டுள்ளன. இவற்றிகாக மிகக் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

நமது நாட்டில் மீனவர் சமுதாயம் பொரு ளாதாரத்தில் மிகவும் பின்தங்கியதொன்று கும். முன்பெல்லாம் வட்டிக்கடைக்காரர் களும் நடுத்தர மக்களும் மீனவர்களுடைய ஏழ்மையை பயன்படுத்திக்கொண்டு அதிக வட்டி வாங்கி அவர்களை ஏமாற்றினர். இவர் களது பிடியிலிருந்து மீனவர்களை விடுவிக்கும் நோக்கத்துடன், கூட்டுறவு இயக்கத்தின் நன் மைகள் இவர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இன்று, இங்கு 29 ஆரம்ப மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள், புதுவை மாநில மீனவக் கூட்டுறவு பெடரேஷன் என்ற அமைப்பின்கீழ் 2,777 அங் கத்தினர்களுடனும் ரூ. 54,605 பங்கு மூல தனத்துடனும் இயங்கி வருகின்றன.

மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இது வரை ரூ. 2.65 லட்சம் கடனுதவி அளிக்கப் பட்டுள்ளது. இச்சங்கங்கள் இத்தொகையை அவற்றின் அங்கத்தினர்களுக்குக் கடனுதவி விநியோகித்துள்ளன. இந்த மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்தினர்களுக்கு நியாய விலையில் நைலான் மற்றும் பருத்தி நூல்கள், மிதப்புகள் முதலிய மீன்பிடி சாதனங்களையும் கடனுதவி வழங்கியுள்ளன.

கூட்டுறவு

புதுவை பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்த போது, இங்கிருந்தவர்களில் பெரும்பாலோருக்குக் கூட்டுறவு இயக்கம் என்ருல் என்ன என்பதே தெரியாதிருந்தது. இணைப்பிற்குப் பிறகே இங்கு கூட்டுறவு இயக்கம் பரவ ஆரம்பித்தது. பொதுமக்களது சமூகப் பொருளாதார நிலையைச் சீர்திருத்தும் உன்னத நோக்கத்துடன் தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக்கம் சிறிது சிறிதாக வியாபித்து எல்லாத் துறைகளிலும் பல்கிப் பரவியது. குறிப்பாகச் சொல்லவேண்டுமாளுல் விவசாயத்தில் கடன் மற்றும் கடனல்லாத வசதிகள் நல்கல், விற்பனை, பக்குவப்படுத்தல், குடியிருப்பு வசதி முதலிய அம்சங்களை இது கவர்ந்தது எனலாம். கடந்த 14 ஆண்டுகளில் புதுவையில் மொத்தம் 213 புதிய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன; இவற்றில் 93 சங்கங்கள் விவசாயக் கடன் வழங்கும் சங்கங்களாகும்.

கிராமக் கடன் வழங்கும் சங்கங்கள்

விவசாயிகளுக்குப் பணம் அவசியம் தேவைப்படும் இக்கட்டான நேரத்தில் கிராமக் கடன் வழங்கும் சங்கங்கள், கடன் வழங்கி உதவி செய்வதால் இவை கூட்டுறவு இயக்கத்தின் பிரதானமானதொரு அம்சமாகக் கருதப்படுகின்றன. இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு ஏனைய விவசாய காரியங்களுக்கும் உற்ற உதவி புரிகிறது. இச்சங்கங்கள் ஆரம்பகாலத்தில் ஏறத்தாழ ரூ. 45 லட்சம் அளவுக்குக் கடன் தொகை வழங்கியது. 1967 – 68-ஆம் ஆண்டில் மட்டும் ஏறக்குறைய இரண்டுமடங்குத் தொகையான ரூ. 85 லட்சம் வரை கடன் வழங்கியுள்ளது.

புதுவை மாநிலக் கூட்டுறவு வங்கி

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு நிதி வழங்கும் மத்திய ஏஜென்ஸியாக விளங்குவது புதுவை மாநிலக் கூட்டுறவு வங்கியாகும். இது இந்திய

ரிசர்வ் வங்கியிடமிருந்து நிதிபெற்று இதனோடு தொடர்பு கொண்ட கடன் வழங்கும் சங்கங்களுக்குக் குறைந்த வட்டிக்கு நிதி யளிக்கிறது. இந்த வங்கி அளித்துவரும் கடன் தொகையின் அளவு நான்காவது திட்ட துவக்கத்தில் ரூ. 1.00 கோடி அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பங்கு மூலதனத்தில் ரூ. 6.73 லட்சம் அரசாங்கம் முதலீடு செய்ததன் காரணமாக 1967-68-ஆம் ஆண்டில் இந்த மாநிலக் கூட்டுறவு வங்கியானது ரூ. 57.80 லட்சம் அளவுக்குக் கடன் கொடுக்க முடிந்தது. விளைபொருட்களின் பேரில் கடன் தரும் முறை 1-7-66 முதல் இங்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. உயர் வளரக திட்டத்திற்கும் தீவிர சாகுபடித் திட்டத்திற்கும் கடன் கொடுத்து உதவுவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது ஆண்டொன்றுக்கு ரூ. 20 லட்சம் அங்கீகரித்திருக்கிறது. நில அபிவிருத்திக்காகவும், சிறுபாசனப் பணிகளுக்காகவும் இவ்வங்கி கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மத்திமகாலக் கடனுதவி அளித்து வருகிறது.

புதுவை மாநிலக் கூட்டுறவு நில அடமாக வங்கி

நில அபிவிருத்திப் பணிகளுக்காக மட்டும், புதுவை மாநிலக் கூட்டுறவு நில அடமான வங்கியானது இதுவரை ரூ. 35 லட்சம் அளவுக்குக் கடன் வழங்கியுள்ளது. இவ்வங்கிக்கு அரசாங்கம் பங்கு மூலதனம், செயல் மூலதனக்கடன் முதலிய வடிவத்தில் நிதியுதவி அளித்து வருகிறது. தமது நிதி வசதியை அதிகப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் இவ்வங்கி ரூ. 14.48 லட்சம் பெறுமானமுள்ள கடன்பத்திரங்களை வெளியிட்டுள்ளது.

கூட்டுறவு விற்பனை

விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு முறையான விற்பனை வாய்ப்பு இல்லாவிடில், மேலும் மேலும் பொருள்களை உற்பத்தி செய்து குவிக்க வேண்டுமென்ற ஆர்வம் குறைந்து விடுமல்லவா? எனவே, உற்பத்தியாளர்களுக்கு இலாபம் கிடைக்கும் வகையிலும் நுகர்வோருக்கு நியாயமான விலையில் பண்

டங்கள் கிடைக்கும் வகையிலும் மூன்று விற்பனைச் சங்கங்கள் புதுவை, காரைக்கால் மற்றும் ஏனும் ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டன.

நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலைகள்

நுகர்வுப் பண்டங்களை நியாய விலையில் எல்லோருக்கும் சரிசமமாகப் பங்கிட்டளிப்பதற்கு கூட்டுறவுப் பண்டசாலைகள் ஏற்ற நிறுவனங்களாகும் என்பது எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் பணியாற்றி நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலைகள் பிரபலமடைந்திருக்கின்றன. இம்மாநிலத்தில் ஆங்காங்கு செயல்பட்டுவரும் 19 பண்டசாலைகள் ஆண்டொன்றிற்கு ரூ. 108.89 லட்சம் பெறுமானமுள்ள பொருள்களை தற்போது விற்பனை செய்து வருகின்றன. புதுவையிலும் காரையிலுமுள்ள கூட்டுறவுப் பண்டசாலைகள் மத்திய அரசு திட்டத்தின்கீழ் மொத்த விற்பனைப் பண்டசாலையாக மாற்றப்பட்டுள்ளன.

தொழிற் கூட்டுறவு

சமுதயாயத்தில் மிகவும் தாழ்ந்த நிலையிலிருப்பவர்கள் தச்சுவேலை, பாய்முடைதல், பொம்மை செய்தல் முதலிய பரம்பரைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களேயாவர். அவர்களுக்கு உற்ற உதவி செய்து அவர்களது வாழ்வை மலரச் செய்ய, அவர்கள் தொழிற் கூட்டுறவுகளின் கீழ் கொணரப்பட்டிருக்கின்றனர். தொழிற்துறை மேற்பார்வையின் கீழ் இம்மாநிலத்தில் தற்போது 21 தொழிற் கூட்டுறவுகள் இயங்கி வருகின்றன.

மீனவர் கூட்டுறவு

புதுவை பாரதத்துடன் இணைந்த காலத்தில் மீனவர்களுடைய வாழ்க்கைத்தரம் மிகவும் சீர்கேடான நிலையில் இருந்தது. எனவே இவர்களும் கூட்டுறவு இயக்கத்தின் பயனை அடைய வழி வகைகள் செய்யப்பட்டன. மீனவர்களுக்கென்று 31 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு சீரிய முறையில் இயங்கி வருகின்றன.

இதர கூட்டுறவுச் சங்கங்கள்

இம்மாநிலத்திலுள்ள மூன்று பால் வழங்கும் சங்கங்களும் தற்போது ரூ. 20.35 லட்சம் அளவுக்கு பால் விற்பனை செய்து வருகின்றன. தரமான பாலைப் பொதுமக்களுக்கு வழங்கியும் பால் விற்பனை செய்யும் சங்க அங்கத்தினர்களுக்கு நியாயமான இலாபம் கிடைக்கச் செய்தும் இச்சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. புதுவையிலுள்ள கூட்டுறவு பால் விநியோகச் சங்கமானது தற்போது சுமார் ரூ. 40 லட்சம் செலவில் பால் பண்ணை ஒன்றை நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்மாநிலத்தில் கைத்தறித்தொழில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதெனலாம். இங்குள்ள 12 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் ஆண்டுதோறும் சுமார் ரூ. 10 லட்சம் அளவுக்குக் கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து வருகின்றன. கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றும் ஒரு திட்டத்தின்கீழ் கூட்டுறவுத்துறைக்கென 90 விசைத்தறிகள் ஒதுக்கப்பட்டன.

இங்குள்ள மூன்று வீடுகட்டும் சங்கங்களும், குறைந்த மற்றும் மத்திய வருவாய் பிரிவினருக்கு, அரசாங்க உதவியுடன் வீடுகள் அமைத்துத்தரும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இந்தியன் காப்பி போர்டிலிருந்து வேலையிழந்து வந்த ஊழியர்களைக்கொண்டு நடத்தப்பட்டுவரும் காப்பித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இயங்கிவரும் முறையே தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஒன்பதாண்டு காலத்திலேயே விரைவான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. புதுவை மாநிலத்திலும் அண்டையிலுள்ள தமிழ் நாட்டுப் பகுதிகளிலும் இதற்கு மொத்தம் 13 கிளைகள் உள்ளன. இதற்கென ஒரு தனி அச்சுக்கூடப் பிரிவும், இதன் உறுப்பினர்களின் கடன் வசதிக்கென ஒரு கடன் வழங்கும் சங்கமும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

குத்தகைக்குப் பயிரிடுவோர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ‘பயிர் கடன் முறை’ திட்டத்தின்கீழ் நிதி வசதி அளிக்கக் கூடுறவு இயக்கம் உதவுகிறது.

இந்த வகையில் இணைப்பிற்குப் பிறகு கூட்டுறவு இயக்கம் இம்மாநிலத்தில் வேரூன்றி சிறப்பான அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறது. இரண்டாவது திட்டத்தில் (கைத்தறி அபிவிருத்தி நீங்கலாக) ரூ. 7.59 லட்சமும் மூன்றாவது திட்டத்தில் ரூ. 20 லட்சமும் கூட்டுறவு இயக்கத்திற்காக செலவிடப்பட்டது. பெரும்பாலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமப்புறங்களின் பொருளாதார நிலை இக்கூட்டுறவு இயக்கத்தினால் பெரிதும் மேம்பட்டதெனில் அது மிகையாகாது.

சமுதாய நல அபிவிருத்தி

புதுவை

நிலப்பரப்பும், மக்கள் தொகையும் போதுமான அளவு பெரியதாக இருந்த காரணத்தால், புதுவை நகரம் நீங்கலாக இப்புதுவைப் பிராந்தியத்திற்கு இரண்டு தேசீய அபிவிருத்தி சேவை வட்டாரங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 169 குக்கிராமங்களும், 97 கிராமங்களும் கொண்ட 291 சதுர கிலோமீட்டர் அளவுடைய நிலப்பரப்பு இவ்வட்டாரத்தின்கீழ் வந்தது. 1955-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி வில்லியனூரைத் தலைமை அலுவலகமாகக்கொண்ட தேசீய விஸ்தரிப்பு சேவைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதன் முதலில் மக்களுக்கு இத்திட்டம் பற்றி புரிந்துகொள்ளச் செய்வதும் அவர்களுடைய ஒத்துழைப்புடன் இத்திட்டத்தைச் செயல்படச் செய்வதும் கடினமாகவே இருந்தது. இணைப்பிற்குமுன், மக்கள் சுய உதவியின் முக்கியத்துவத்தைப்பற்றிப் புரிந்துகொள்ளும் நிலையில் இல்லை. விடாமுயற்சியின் மூலமே மக்கள் மனதில் இதனை நிலைபெறச்செய்ய வேண்டியதாயிற்று. இதன் பலனாக, நிர்ணயித்த குறியீட்டிலும் செலவிலும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டது. இத்திட்டங்களில் கண்ட வெற்றிகளை ஆலோசித்துப் பார்த்த இந்திய அரசாங்கம் 1959-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலேயே அதாவது குறிப்பிட்டிருந்த காலத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே தேசீய விஸ்தரிப்பு சேவையை சமுதாய நல அபிவிருத்திப் பாணியில் மாற்ற முடிவெடுத்தது.

இவ்வட்டாரம் முதல் மற்றும் இரண்டாவது கட்டங்களைக் கடந்து இரண்டாவது கட்டத்திற்குப் பிற்பட்ட நிலையை 1965-ஆம் ஆண்டு அக்டோபரில் எய்தியது.

முதல் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட காலங்களில் கண்ட சில

குறிப்பிடத்தக்க சாதனைகளாவன: (1) கால் நடை மற்றும் விவசாயத்தில் அதிக அளவில் விஞ்ஞான முறைகளை கையாளுதல், (2) குடி நீர் கிணறுகள், உயர் நீர்த்தேக்கத் தொட்டிகள், கிராமங்களுடன் தொடர்பு கொள்ளும் சாலைகள், தெருக்கள், மற்றும் சமுதாய பொழுது போக்கு மன்றங்கள் முதலிய ஆதார வசதிகளை அமைத்தல், (3) விவசாயத் தேவைகளுக்கு வேண்டிய கடன் வசதி அளித்தல் போன்றவை ஆகும்.

நவீன விவசாய முறைகளை மேற்கொள்வது பற்றிச் சிறந்த முறையில் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டது. விவசாயத்தில் அபிவிருத்தியடைந்த பலதொழில் நுணுக்கங்கள் விவசாய நிரூபணங்கள் மூலம் செய்து காட்டப்பட்டன. கருவிகள் வாங்குவதற்கான உதவித் தொகை அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. விதைகள், உரங்கள், எருதுகள், பம்பு செட்டுகள் ஆகியவை வாங்கவும், கிணறுகள் தோண்டவும், கிணறுகளைப் பழுது பார்க்கவும் மற்றும் குழாய்க் கிணறுகள் அமைக்கவும் விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டது.

சமூக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சகாய விலையில் கோழிகள் விநியோகம் செய்தல், கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சையளித்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. தேவைப்படும் வியாபாரிகளுக்கு முட்டைகளும் விநியோகிக்கப்படுகின்றன. கால்நடைகளின் தரத்தை உயர்த்த ஊக்கமளிக்கும் வகையில் சகாய விலையில் கன்றுக் குட்டிகள் வழங்கும் திட்டமும் நடைமுறையில் இருந்து வருகிறது.

மக்களின் சமூக நிலையை மாற்றும் பொருட்டு பரந்த அளவிலான சமூகக் கல்வித் திட்டம் ஒன்று இவ்வட்டாரத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. சமூகக் கல்வித் திட்டத்தின்கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு முதியோர் பள்ளிக்கூடங்கள், சமுதாயப்பொழுதுபோக்கு மன்றங்கள், இளம் விவசாயிகள் சங்கங்கள், கிராமத் தலைவர்கள் முகாம்

கள் ஆகியவை நடத்தப்படுகின்றன. பெண்களுக்காக உள்ள ஒன்பது முதியோர் பள்ளிக்கூடங்கள் உட்பட மொத்தம் 32 முதியோர் பள்ளிக்கூடங்கள் இவ்வட்டாரத்தில் செயல்படுகின்றன. ஒவ்வொரு முதியோர் பள்ளியிலும் ஒரு சிறு நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் ஒரு வானொலிப் பெட்டியும், சிறு நூல் நிலையமும், விளையாட்டுக்கான பொருள்களையும் கொண்ட 104 சமுதாய பொழுதுபோக்கு மன்றங்கள் உள்ளன. சமுதாய பொழுதுபோக்கு மன்றங்களில் குழந்தைகள் பூங்காக்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டிலும் சுமார் ஒன்பது குழந்தைகள் பூங்காக்கள் கூடுதலாக்கப்படுகின்றன. இளம் விவசாயிகள் சங்கங்களை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இத்தகைய சங்கங்கள் தற்போது 30 செயல்பட்டு வருகின்றன. விவசாய நடைமுறைகளிலும், கோழி வளர்ப்பிலும், தேனீ வளர்ப்பிலும், கம்போஸ்ட் தயாரிப்பிலும் மற்றும் கிராம நடவடிக்கைகளிலும் இச்சங்கங்களின் அங்கத்தினர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

வாய்க்கால்கள், குளங்கள் ஆகியவற்றிற்குத் தூர் வாருதல், கரைக் கட்டுகளைப் பழுது பார்த்தல் போன்றவை சிறு பாசனத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் முக்கிய பணிகள் ஆகும். பம்பு செட்டுகள் அமைக்கவும், கிணறுகள் வெட்டவும் விவசாயிகளுக்குக் குறைந்த அளவு வட்டி விகிதத்தில் கடன் அளிக்கப்பட்டுள்ளது. சிறந்த முறையில் வடிகால் திட்டத்தை அமைக்கும் பொருட்டு சாக்கடைகள், வடித்தொட்டிகள், விஞ்ஞான ரீதியில் ஒதுங்கிடங்கள் ஆகியவற்றை அமைத்தல் போன்றவை கிராமச் சுகாதாரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான சில பணிகள் ஆகும்.

கிராம வாசிகளுக்குச் சுமார் 320 ராட்டைகளும், ஒன்பது தறிகளும் சகாய விலையில் வழங்கப்பட்டன. பாய்முடைதல், சோப்புத் தயாரித்தல், பொம்மைகள் செய்தல், தேனீ வளர்ப்பு, கைக்குத்தல் அரிசி, பட்டு நெசவு முதலிய குடிசைத் தொழில்கள் கிராம மக்களிடையே ஊக்குவிக்கப்பட்டுள்ளன. கிராமத் தொழிலாளர்களுக்கும், கூட்டுறவு ஸ்தா

பணங்களுக்கும் நவீனக் கருவிகள் சகாய விலையில் வழங்கப்பட்டன. 140 தேன் கூடுகள்கூட சகாய விலையில் வழங்கப்பட்டன.

நடைமுறையிலுள்ள சாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது நன்கு உணரப்பட்டது. ஆகவே, புதிய சாலைகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது வரை 87 கிலோ மீட்டர்களுக்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 52 கி. மீட்டருக்கும் அதிகமாக நடைமுறையிலுள்ள சாலைகளுக்குக் கற்கள் போடப்பட்டன. சாலைகளுக்குக் குறுக்கே 34 பாலங்களும் கட்டப்பட்டுள்ளன.

காரைக்கால்

விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட 46 குக்கிராமங்களையும், 64 கிராமங்களையும், 35,812 ஏக்கர் நிலத்தையும் கொண்டது காரைக்கால் பிராந்தியம் ஆகும். இவ் வட்டாரப் பகுதியில் நெல் முக்கியப் பயிராகும். உணவு உற்பத்தியில் இப்பகுதிகளில் பயிர்த்தொழிலில் அபிவிருத்தியடைந்த முறைகள் நன்கு பயன்படுத்தப்படுகின்றன. அடுத்தடுத்து ஏற்பாடு செய்யப்பட்ட கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாம்கள் மூலமாக விவசாயிகளுக்கு நூதன பயிர்த்தொழில் முறைகளில் பயிற்சியளிக்கப்பட்டது.

கால்நடைப் பராமரிப்பில் இவ்வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கால்நடை இலாக்காவின் வேலைகளையும் செய்கின்றனர். உயர்ந்த ரக பொலிக் காளைகளின் மூலம் இனவிருத்தி செய்து கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. உயர் ரகக் கோழிகளான ஒயிட்லெக்கான், ரோட் ஐலண்ட், மைனர்கா போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வட்டார அலுவலர்கள் மேற்கொண்ட நடவடிகைகளின் பயனாக கால்நடைகளுக்கு ஏற்படும் வியாதிகள் மிகவும் குறைந்துள்ளன.

இணைப்பிற்குப்பின் அதிக அளவில் பொழுது போக்குச் சங்கங்களும், வானொலி மன்றங்களும் நூல் நிலையங்களும் மற்றும் படிப்

பகங்களும் இவ்வட்டாரத்தில் திறக்கப்பட்டுள்ளன. கிராமங்களுக்குக் குடிநீர் வசதியளிக்கும் பொருட்டு பெரும்பாலும் எல்லா கிராமங்களிலும், உயர்மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், கைப் பம்புகள் மற்றும் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வியறிவு அற்ற கிராமவாசிகள், அதிக அளவில் வகுப்புகளுக்குவர முதியோர் கல்வித்திட்டம் உதவியுள்ளது. குறிப்பாகச் சேரிப் பகுதிகளில் வாழும் பெண்கள் அதிக அளவில் வகுப்புகளுக்குவர முன்வந்துள்ளனர்.

பெண்கள் நலத்திட்டத்தின்கீழ் பெண்களுக்கென பல ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் பெண்கள், குடும்ப நலம், சத்துணவு, குழந்தை நலம் போன்றவற்றில் பயிற்சி பெறுகின்றனர். தகுதிவாய்ந்த பெண்களுக்குத் தையல் மற்றும் பூ வேலைகளில் பயிற்சியளிக்க ஒரு பயிற்சி நிலையமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு, விவசாய அமைப்பு மற்றும் 'யூனிசெப்' ஆகியவற்றின் உதவியுடன் இந்திர்வாகம் கிராமவாசிகளுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கும் முறைகளைச் செயல்முறையில் செய்துகாட்டும் வகையில் ஒரு முன்னோடித் திட்டத்தை கோட்டுச்சேரி கொம்யூனிலுள்ள திருவேட்டக்குடியில், ஒரு பழத்தோட்டம் ஆரம்பித்து அவ்வப்பதன்மூலம் செயல்படுத்தப்பட்டது. தங்களது வீட்டுப் பகுதிகளில் சிறு தோட்டங்கள் அமைக்க காய்கறி விதைகள் மக்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டன. மூன்று கோழிப் பண்ணைகள்கூட ஆரம்பிக்கப்பட்டன.

உள்நாட்டு மீன் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ஐந்து ஏக்கர் அளவுகொண்ட நான்கு குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உயர்ரக மீன் குஞ்சுகள் மீன் வளர்ப்புக்காக சேகரித்து வைக்கப்பட்டன. கடல் மீன் திட்டத்தின்கீழ் மீன் உணவு தடங்கலின்றி கிடைக்கும்படிச் செய்ய மண்டபத்தூரில் ஒரு மீன் அளக்கேந்திரம் துவக்கப்பட்டது.

1960-ஆம் ஆண்டில், யூனியன் பிரதேசங்களில் சிறந்த கிராமத்திற்கான அகில இந்திய

பரிசை காரைக்காலிலுள்ள கீழையூர் கிராமம் வென்றது.

மாஹே

1959-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் துவக்கப் பட்ட மாஹே வட்டாரம் 1960-ல் தமது முதல் கட்டச் செயலாற்றத்தை ஆரம்பித்து 1966-ல் இரண்டாம் கட்டத்தை எட்டியது. இவ்வட்டாரம் ஐந்து கிராமங்களுடன்கூடிய 2,028 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகும்.

ஜப்பானியமுறை நெல் சாகுபடி இங்கு நன்கு பிரபலமாக உள்ளது. தவிர விவசாயிகள் நவீனமுறைச் சாகுபடி முறைகளையும் மேற்கொண்டுள்ளனர். நெல் தவிர பாக்கு, நேந்திரம்பழம், மிளகு, மரவள்ளிக்கிழங்கு போன்றவையும் ஊக்குவிக்கப்பட்டன.

மீன்பிடிப்புக்குத் தேவைப்படும் பாய்மரத் துணிகள், பருத்தி மற்றும் செயற்கை நூல் முதலியவையும் மீனவர்கட்குச் சகாய விலையில் வழங்கப்பட்டன.

சிறு பாசனத் திட்டத்தின்கீழ் கால்வாய்களை அகலப்படுத்துதல், தூர் எடுத்தல், மற்றும் ஆழமாக்குதல் போன்ற வேலைகளும், தண்ணீரைத் தேக்கிவைத்து வெளிப்படுத்தும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாசனக் குளங்களை அமைத்து இவ்வட்டாரத்திலுள்ள காய்கறிப் பயிர்தொழிலுக்கு மிகுந்த ஊக்கமூட்டப்பட்டது.

கிராமச் சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஏராளமான கிணறுகளும், ஒதுங்கிடங்களும், சாக்கடைகளும் இவ்வட்டாரத்தில் அமைக்கப் பட்டன.

முப்பத்தாறுக்கும் அதிகமான கலை மற்றும் விளையாட்டுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்தகைய சங்கங்கள் பலவற்றில் நூல் நிலையங்களும் உள்ளன. இளம் விவசாயிகள் சங்கத்திற்கு விளையாட்டுச் சாமான்கள், தேனீ கூடுகள் மற்றும் விவசாயக் கருவிகள் ஆகியவை சகாய விலையில் வழங்கப்பட்டன.

ஏனும்

ஏனும், கோதாவரி ஆற்றின் பக்கமாகச் சுமார் 20 கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட ஒரு சிறு திட்டுப் பகுதியாகும். இது ஐந்து முக்கிய கிராமங்களைக் கொண்டது. ஏனும் வட்டாரம் 1-4-64-ல் தீவிர நிலையை எட்டியது. 31-1-69-ல் அது தனது முதல் கட்டத்தைப் பூர்த்தி செய்யும்.

நவீன விவசாய முறைகளை மேற்கொள்ளும் பொருட்டு விவசாயிகளுக்கான வசதிகள் விரிவாக்கப்பட்டன. கம்போஸ்ட் குழிகளைத் தோண்ட விவசாயிகளுக்கும், இளம் விவசாயிகள் சங்கங்களுக்கும் சகாயநிதி அளிக்கப்பட்டது. ஆண்டுதோறும் 500 முதல் 600 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது.

இப்பகுதியில் நிறைந்த அளவில் கால்நடைகள் உள்ளன. ஆகவே. இப்பிராந்தியத்தில் கால்நடைகளை அபிவிருத்தி செய்ய பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கால்நடைகளின் தரத்தை உயர்த்த விவசாயிகள் ஊக்கமளிக்கப்பட்டனர். அவர்களும் அதிக அளவில் கால்நடை பராமரிப்பு நிலையங்களின் சேவையைப் பெற முன்வந்தனர்.

மீன்துறையினரால் மீன் பிடிக்கும் கருவிகள் சகய விலையில் வழங்கப்பட்டன. பாசன வசதியை ஒழுங்குபடுத்தும் பொருட்டு சிறு பாசனத்திட்டத்தின்கீழ் வாய்க்கால்களுக்குத் தூர் எடுக்கும் வேலையும், பாலங்கள் அமைக்கும் வேலையும் செய்து முடிக்கப்பட்டன.

பல நூற்றாண்டுகாலமாக ஒரே நிலையில் தேங்கியிருந்த கிராம வாசிகளின் வாழ்க்கை நிலை, மேற்கூறிய திட்டங்கள் சிறந்த முறைகளில் செயல்படுத்தப்பட்டதன் காரணமாக மேம்பாடடைந்துள்ளது.

மின்சாரம்

புதுவை மாநிலத்திலுள்ள மொத்தம் 389 கிராமங்களில் 276 கிராமங்கள் புதுவைப் பகுதியில் உள்ளன. இணைப்பின்போது மொத்தம் 51 கிராமங்கள் மட்டுமே மின்சார வசதி பெற்றிருந்தன. இணைப்பிற்குப்பின் செயல்படுத்தப்பட்ட மின்சார அபிவிருத்தித் திட்டங்களின் பயனாக புதுவைப் பகுதியிலுள்ள 267 கிராமங்களும் மூன்றுவதுத் திட்ட இறுதியிலேயே மின்சாரமயமாக்கப்பட்டன.

காரைக்கால் பகுதியின் மின்சார விநியோகப் பொறுப்பை தனியார் நிறுவனம் நிர்வகித்து வந்தது. இந்நிறுவனத்திடமிருந்து புதுவை அரசு இப்பொறுப்பை 1-12-67 முதல் தாமே மேற்கொண்டது. காரையிலுள்ள 116 கிராமங்களில் 31 கிராமங்கள் மட்டுமே அப்பொழுது மின்சார வசதி பெற்றிருந்தன. அரசாங்கம் இப்பொறுப்பை மேற்கொண்ட மிகக் குறுகிய காலத்திலேயே, அதாவது 1968-ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள்ளேயே மேலும் 36 கிராமங்கள் மின்சார வசதிபெற்றன. மின்சார மயமாக்கப்பட்ட கிராமங்களின் சதவிகிதம் 1954-ல் 13 ஆக இருந்ததானது 1967 – 68-ஆம் ஆண்டின் இறுதியில் 80 ஆக உயர்ந்தது.

கீழே குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்கள் புதுவைப் பகுதியில், 1954 – 55-ல் இருந்த நிலையையும், 1967 – 68-ல் இருந்த நிலையையும் விளக்குகின்றன.

	1954–55	1967–68
மின்சார வசதிபெற்ற நகரமும் கிராமங்களும்	42	267
மின்சார வசதிபெற்ற வீடுகள்	2,825	15,239
விவசாயத்திற்கு மின்சாரம்	267	3,843
தொழில் (எல். டி.)	63	483
தொழில் (எச். டி.)	3	13
தெரு விளக்குகள்	798	9,465

இணைப்பின்போது, இங்கு செலவான மின் சார அளவு 57.14 லட்சம் யூனிட்டுகளே ; இது 1967 – 68-ஆம் ஆண்டில் 595.15 லட்சமாக உயர்ந்தது. தனி நபர் மின்சார உபயோக விகிதாச்சாரம் 16.1 யூனிட்டாக இருந்த தானது 228.3 யூனிட்டாக உயர்ந்தது. மின் சார அபிவிருத்தித் திட்டங்களின் செய லாற்றத்திற்காக 1967 – 68 வரை ரூ. 169.50 லட்சம் செலவு செய்யப்பட்டது.

கடந்த 14 ஆண்டு காலத்தில் மின்சார விநி யோகத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் பலவிதமான ஏற்பாடுகளைப் புதுவை மின் சாரத்துறை செய்துள்ளது. காரைக்கால் மின் சார விநியோகப் பொறுப்பையும் மாஹே மின்சார விநியோகப் பொறுப்பையும் இவ் வரசு சமீபத்தில் ஏற்றுக்கொண்டது குறிப் பிடத்தக்கதாகும். துணை நிலையங்களின் மின் சார விநியோகத்திறனும் தேவையை யொட்டி பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. புதுவைப் பகுதியில் எல்லா கிராமங்களும் மின்சார மயமாக்கப்பட்டுள்ளன. இவ் வனைத்து சாதனைகளும் புதுவை மாநிலத்தில் மின்சார நிலை சீர்பட்டு வருவதற்குச் சான்று பகர்கின்றன.

நான்காவது திட்ட காலத்தில் காரைக்கால் பகுதியில் உள்ள 116 கிராமங்களும் மின்சார மயமாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. கிராமங்களில் மின் விஸ்தரிப்பு செய் வதற்கும் தற்போதுள்ள மின்சார விநியோக முறைகளை அபிவிருத்தி செய்வதற்கும் மேற் கொண்டு டிரான்ஸ்பார்மர்கள் நிறுவுவதற் கும் வில்லியனூர் துணை நிலையத்தின் அபி விருத்தி வேலைகளுக்கும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் புதிய இணைப்புகள் அமைப்ப தற்கும் நான்காவது திட்டகாலத்தில் ரூ. 59.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணி

சிறு பாசனம்

இம்மாநிலத்தில் விவசாயத்திஞல் ஏற்படும் பொருளாதார அபிவிருத்திக்கு சிறுபாசனம் முக்கிய பங்கு வகிக்கிறது. நீர்ப்பர்சனம் இங்கு ஏரிகளின் மூலமாகவும் கால்வாய்களின் மூலமாகவும், ஊற்றுக் குளங்களின் மூலமாகவும் செய்யப்பட்டுவருகிறது. தற்போது இங்குள்ள மொத்தம் 89 ஏரிகளும் ஊற்றுக் குளங்களும் 7720 ஹெக்டேர் நிலத்திற்கு நீர்ப் பாசன வசதி அளித்து வருகின்றன. புதுவையிலுள்ள ஊசுட்டேரி மற்றும் பாகூர் ஏரி ஆகிய இரண்டும் ஆறுகளின் மூலமாக நீரைப் பெறுகின்றன. இவையன்றி, ஏராளமான கிணறுகளும் குழாய்க் கிணறுகளும் விவசாயத்திற்கு நீர்ப்பாசனத் தேவையை நிரப்புகின்றன. பாகூர் ஏரியின் தண்ணீர் விநியோகத்தை ஸ்திரப்படுத்துவதற்காக நடுத்தரப் பாசனத்திட்ட அடிப்படையில் சொர்ணவூர் அணைக்கட்டு நிறுவப்பட்டு வருகிறது. இங்குள்ள பல ஏரிகளில் நீர்ப்பிடிப்புக் கொள்ளளவை அதிகரிக்கும் நோக்கத்துடன், அவைகளைச் சீரமைத்தல், தூர் எடுத்தல், கரைகளைப் பலப்படுத்தல் போன்ற அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

காரைக்கால் பகுதியில் உள்ள சுமார் 10,496 ஹெக்டேர் விளைச்சல் நிலத்திற்குப் பாசன வசதி காவிரிக் கால்வாய்களின் மூலமாகக் கிடைக்கிறது. வாஞ்சியூரில் செயல்படுத்தப் படும் மேல்மட்ட நீர்ப்பாசனத்திட்டம் மற்றொரு நீர்ப்பாசன முறையாகும். பிராவடையஞற்றில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் செலவுத்தொகை ரூ. 2.83 லட்சம். இத்திட்டம் பூர்த்தியானதும் திருமலைராயன்பட்டினம் கொம்யூனிலுள்ள 337 ஏக்கர் நிலமும் பாசன வசதிபெறும். இது விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

மாஹேயில், ஆறுகளிலிருந்து பிரிந்துவரும் பாசனக் கால்வாய்கள் சுமார் 50 ஹெக்டேர்

நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கின்றன. இவைகள் பருவக்காலங்களில் மட்டுந்தான் முழுப்பயனும் அளிக்கின்றன.

ஏனுமில், கோதாவரிக் கால்வாய் மூலமாக சுமார் 226 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறுகின்றது. சமீபத்தில் பூர்த்தியான அடிவைபள்ளக் கால்வாய்த்திட்டம் மேலும் 452 ஹெக்டேர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதி அளிக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

நடுத்தரப் பாசனம்

இணைப்பிற்குப் பிறகு, வீடூர் அணைக்கட்டுத் திட்டம், சொர்ணவூர் அணைக்கட்டுத் திட்டம் ஆகிய இரண்டு நடுத்தரப் பாசனத் திட்டங்கள் செயலாற்றத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டன.

இவற்றுள் வீடூர் திட்டம் சென்னை, புதுவை ஆகிய இரண்டு அரசுகளின் கூட்டு முயற்சியில் இரண்டாவது திட்டகாலத்தின்போது செயலாற்றத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் ரூ. 88.94 லட்சம் செலவில் 1960-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பூர்த்தி செய்யப்பட்டது. இந்த செலவுத்தொகை இவ்விரண்டு மாநிலங்களிலும் உள்ள ஆயக் கட்டுகளின் விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்ளப்பட்டது. இதன்படி, 31.25 சதவிகிதம், அதாவது, ரூ. 28 லட்சத்தைப் புதுவை மாநிலம் தமது பங்கிற்காக வழங்கியது. புதுவை மாநிலத்தில் இதன் பயனாக 1000 ஏக்கர் நிலம் பயனடையக்கூடும். எனினும், தற்போது 553 ஏக்கர் நிலங்களே வீடூர் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. போதிய கால்வாய்கள் அமைக்கும் பணி பூர்த்தியானதும் குறியீடாகிய 1000 ஏக்கர் நிலமும் பாசனத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

பெண்ணையாற்றில் சொர்ணவூருக்கருகில் நிறுவப்பட்டுவரும் சொர்ணவூர் அணைக்கட்டுத் திட்டத்திற்காக ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இச்செலவுத் தொகை ரூ. 37 லட்சமாக உயரக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் முழுச் செலவையும் புதுவை மாநிலமே ஏற்றுக்கொண்

டிருக்கிறது. மூன்றுவதுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் விரைவில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனுல், பங்காரு வாய்க்கால் மூலமாக பாசன வசதிபெறும் 4,778 ஏக்கர் நிலம் ஸ்திரமான பாசன வசதிபெறும். 1968-ஆம் ஆண்டு மார்ச் மாதம்வரை இத்திட்டத்திற்காக ரூ. 17 லட்சம் செலவாகி இருக்கிறது.

வெள்ளப் பாதுகாப்பு நடவடிக்கைகள், மூன்ருவதுத் திட்ட காலத்தில்தான் செயலாற்றத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. வெள்ளத்தினுல் பாதிக்கப்படும் நிலங்களையும் பயிர்களையும் பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கம். கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்புகளைத் தவிர்ப்பதற்கும் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மண் வளப் பாதுகாப்பு

விளைச்சல் நிலங்கள் கடலரிப்பினுலும், கடல் நீர் பாய்வதால் ஏற்படும் உவர்ப்பினுலும் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, மூன்ருவதுத் திட்டக்காலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இம்மாநிலத்தின் பல்வேறு பாகங்களில் உள்ள 900 ஏக்கர் நிலங்கள் இதுவரை பாதுகாக்கப்பட்டுள்ளன.

பாதைகள்

புதுவை, காரைக்கால், மாஹே, ஏனும் ஆகிய நகர்ப்பகுதிகளை இணைப்பதற்கும் அண்டை மாநிலங்களிலுள்ள மாவட்ட நகரங்களை இணைப்பதற்கும் புதுவை மாநிலத்தில் நல்ல பாதை வசதிகள் அமைந்துள்ளன. இணைப்பின்போது இவைகளில் பல தாரிடப்படாமல் இருந்தன. பாதைகளுக்குக் கான்கிரீட் போடுதல், தார் போடுதல், கல்லடித்தல் முதலிய அபிவிருத்திப் பணிகள் இணைப்பிற்குப் பின்னரே நடந்தேறின. இன்று மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்களுக்குச் செல்லும் பாதைகளில் பல நல்ல நிலையில் அமைந்துள்ளன. இந்நிர்வாகம், நகர மன்றங்களுக்குப் பாதைகளைப் பராமரிப்பதற்காக, உதவி மானியம் வழங்குவதோடல்லாமல், நகர மன்றங்களுக்குச் சொந்தமான பாதைகள் சிலவற்றையும்

தாமே கண்காணித்து அபிவிருத்தி செய்து வருகிறது. 1967 – 68-ஆம் ஆண்டின் இறுதி வரை இவற்றிற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 112.57 லட்சம்.

குடிநீர் விநியோகம்

புதுவை அரசு, உயர் நீர்த்தேக்கத் தொட்டிகள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் ஆகியவை அமைத்துத் தருவதன் மூலமாக, அநேக கிராமங்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்கச் செய்கிறது.

காரைக்காலில் தற்போதுள்ளதல்லாமல் மற்றுமொரு மெயின் குழாய் ரூ. 8 லட்சம் செலவில் அகலங்கண்ணிலிருந்து கொண்டுவரப் பட்டுள்ளது. ரூ. 2.55 லட்சம் செலவில் பல குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் பயனாக இன்று காரை நகரப் பகுதிக்கு சுத்தமான குடிநீர் வசதி கிட்டியிருக்கிறது.

புதுவை நகரப்பகுதிக்குக் குடிநீர் விநியோகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பட்டாணிக்கடையில் ஒரு உயர் நீர்த்தேக்கத் தொட்டி ரூ. 1.22 லட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. முத்திரப்பாளையத்தில் தற்போது அமைக்கப்படவிருக்கும் 'டீசல் ஜெனரேட்டர்', மின்சாரம் தடைப்படும்போதும் தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய உதவி புரியும். மேலும் ரூ. 14.60 லட்சம் செலவில் முத்திரப்பாளையத்திலிருந்து புதுவைக்கு 21 அங்குல விட்டம் கொண்ட புதிய மெயின் குழாய் ஒன்று போடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நான்காவதுத் திட்டகாலத்தின் இறுதியில் 1,000 க்குமேற்பட்ட மக்கள் தொகை கொண்ட எல்லா கிராமங்களும் போதிய அளவு குடிநீர் வசதியைப் பெற்றுவிடும். புதுவைப் பகுதியிலும் காரைப் பகுதியிலும் ஆறு கிராமங்களில் ஏற்கெனவே இப்பணி துவக்கப்பட்டுவிட்டது.

சாக்கடைத் திட்டம்

புதுவையிலுள்ள பெரும்பாலான வீடுகளில் இருக்கும் ஒதுங்கிடங்கள் சாதாரணமான

திறந்த அமைப்பு முறையைக் (Dry Latrine) கொண்டவை. சில வீடுகளில் இவை 'செப்டிக் தொட்டி' முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து வரும் கழிவுநீர் வீதிகளிலுள்ள சாக்கடைகளில் விடப்படுகிறது. இந்த சுகாதாரமற்ற முறையைத் தவிர்த்து, மக்களுக்குச் சுத்தமான சுற்றுப்புற சூழ்நிலையை அமைத்துத் தருவதற்காக, பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ. 58.35 லட்சம் செலவில், செயல் படுத்தப்பட்டு வருகிறது. மூன்ருவது திட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இதில் சேரும் கழிவு நீரும் அசுத்தங்களும் விஞ்ஞான முறையில் அப்புறப்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக இதுவரை ரூ. 40.00 லட்சம் செலவாகியிருக்கிறது.

தொழில்

இணைப்பிற்கு முன்னர், புதுவை மாநிலத்தில் சிறு தொழில் நிலையங்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு மட்டுமே இருந்தன. தொழில் அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் யாவும் புதுவையில் தொழில் துறை ஆரம்பிக்கப்பட்ட பிறகே செயல்படுத்தப்பட்டன. இதன் விளைவாக இங்கு 253 சிறு தொழிற்சாலைகள் சுமார் ரூ. 65 லட்சம் பெறுமானமுள்ள மூலதனத்துடன் இயங்கி வருகின்றன. இவற்றினால் ஏறக்குறைய 2000 பேருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இவையன்றி, இம்மாநிலத்திற்கென 223 விசைத்தறிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இணைப்பின்போது மூன்றாக இருந்த நூற்பு ஆலைகள் இன்று ஐந்தாக உயர்ந்துள்ளன. நாளொன்றுக்கு 1000 முதல் 1500 டன்கள் வரை பிழிவுச் சக்தி கொண்ட ஒரு சர்க்கரை ஆலையும் இங்கு இயங்கி வருகிறது.

புதுவைத் தொழில் துறையானது, சிறு தொழில் அபிவிருத்திக்காக பலவிதமான அபிவிருத்தித் திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. புதுவையிலும் காரைக்காலிலும் உள்ள தொழிற்பேட்டைகளில், முறையே 16 ஷெட்டுகளும், 25 ஷெட்டுகளும் அமைக்கப்பட்டு தொழிலதிபர்களுக்கு வழங்கப்பட்டன. தற்போது சுமார் 26 தொழில் நிலையங்கள் இத்தொழிற் பேட்டைகளில் இயங்கி வருகின்றன. தொழிலதிபர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளுக்கென சொந்தமாக தொழிற்கூடங்களை அமைத்துக்கொள்ளும் வகையில், சீர்திருத்தப்பட்ட மனைகளும் புதுவையிலுள்ள தொழிற்பேட்டையில் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டைகளுக்கென இரண்டாவது, மூன்றாவது திட்டங்களில் ரூ. 10.20 லட்சம் செலவிடப்பட்டது. புதுவையில், மணப்பட்டு என்ற இடத்தில், மற்றொரு தொழிற்பேட்டை விரைவாக உருவாகிவருகிறது. இதில் ஏழு தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலைகளுக்கென மாநில உதவித் திட்டத்தின்கீழ் ரூ. 10.98 லட்சம் தொழிலதி

பர்களுக்கு இரண்டாவது, மூன்றுவது திட்டத்தில் கடனுக தொழிற்கூடங்கள் அமைக்க இன்னும் பிற காரியங்களுக்கு இக் கடன் தொகை வழங்கப்பட்டது. சாதாரண வட்டி விகிதாச்சாரத்திற்கும், வட்டிச்சலுகை விகிதாச்சாரத்திற்குமிடையிலுள்ள வித்தியாசத்தை ஈடுசெய்வதற்காக ரூ. 0.29 லட்சம் வட்டிச் சகாய நிதி அங்கீகரிக்கப்பட்டது.

கிராமக் கைவினைஞர்களுக்காக நியாயமான விலையில் பொருள்களை ஆக்கித்தருவதற்கு இரண்டு பணி மற்றும் பொது வசதித் தொழிற்கூடங்கள், புதுவைக்கு அடுத்த வில்லியனூரிலும் காரைக்காலுக்கடுத்த கோட்டுச்சேரியிலும் ஆரம்பிக்கப்பட்டன. மணப்பட்டிலும் இத்தகையதொரு தொழிற்கூடம் நிறுவப்பட்டு வருகிறது. இதுவும் விரைவில் ஆரம்பிக்கப்படும். இத்தொழிற்கூடங்களுக்காக மூன்றுவது திட்டத்திலும் அதையடுத்த வருடாந்திரத் திட்டங்களிலும் ரூ. 1.69 லட்சம் செலவிடப்பட்டது.

இத்தொழில்துறை தொழிற் கூட்டுறவுகளை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டது. இதன் பயனுக 21 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தற்போது இங்கு இயங்கி வருகின்றன. நிர்வாகச் சகாயநிதி, சாதனம் மற்றும் தொழிற்கூடத்திற்கான சகாய நிதி, பங்கு முதலீடு ஆகிய வடிவத்தில், ரூ. 1.21 லட்சம் அளவிற்கு, இத்தொழில் கூட்டுறவுகளுக்காக பொருளுதவி செய்யப்பட்டது.

இவையல்லாமல், இத்தொழில்துறை சில அரசாங்கத் தொழில் நிறுவனங்களையும் நடத்தி வருகிறது. இவற்றில், புதுவையிலுள்ள மாத்தொழில் மற்றும் பயிற்சி நிலையம், புதுவையிலும் ஏனமிலும் உள்ள தோல் பொருள் உற்பத்தி நிலையம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. 1967 – 68-ஆம் ஆண்டில், சென்னை தொழில் முதலீட்டு கார்ப்பரேஷனின் பலாபலன் இம்மாநிலத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டது. இதன் காரணமாக, புதுவையில் உள்ள தொழில் அதிபர்கள், புதிய தொழில் நிலையங்களைத் துவக்க ஆண்டு தோறும் ரூ. 2 லட்சம் அளவிற்குக் கடன் வசதி பெறுவர்.

கல்வி

இணைப்பிற்குப் பிறகு புதுவையில் ஏற்பட்ட கல்வி அபிவிருத்தி மிகவும் முக்கியத்துவம் வாய்ததோடன்றி, இம்மாநிலத்தை இந்தியாவிலுள்ள, கல்வியில் முன்னேற்றமடைந்த மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் அளவிற்கு உயர்த்தியுள்ளது. ஆரம்பக் கல்வி நிலையங்கள் இல்லாத கிராமங்களே இல்லையென்று சொல்லலாம். ஒன்று அல்லது பல உயர்நிலைப்பள்ளிகள் ஒவ்வொரு கொம்யூன்களிலும் மற்றும் கல்லூரிக் கல்விக்கான வசதிகள் இம்மாநிலத்திலேயே அமைந்துள்ளன.

மூன்றிலிருந்து ஐந்து வயதிற்குட்பட குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களையும், பள்ளி செல்லுமுன் கற்கவேண்டியவற்றையும், சுகாதார-பொழுதுபோக்கு விளையாட்டுகளையும் கற்றுக்கொடுக்கும் குழந்தைகளுக்கான கல்வி நிலையங்கள் இணைப்பின்போது இம்மாநிலத்தில் இருக்கவில்லை. இணைப்பிற்குப்பின் 1967 – 68-ல் (அரசாங்கம் மற்றும் தனியார் மேற்பார்வையில்) 3,602 குழந்தைகளைக் கொண்ட 47 குழந்தைகளுக்கான கல்வி நிலையங்கள் இருந்தன.

ஆரம்பக் கல்வி

1954-ஆம் ஆண்டுவரை, பிரெஞ்சு அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஏழுவருடகால ஆரம்பக்கல்வி நிலையங்களே செயல்பட்டு வந்தன. அப்போது 112 ஆரம்பக்கல்வி நிலையங்களே இங்கு இருந்தன. பல கிராமங்களில் ஆரம்பக்கல்வி நிலையங்கள்கூட இடம்பெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக கிராமப்புறங்களிலுள்ள பல குழந்தைகள், அடிப்படைக்கல்வி வசதிகள்கூட கிட்டாத அளவிற்கு அவதியுற்றனர். இணைப்பிற்குப்பின் இந்நிர்வாகம் ஆறிலிருந்து பதினேரு வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்-சிறுமியர் அனைவருக்கும் ஆதாரக்கல்வித் திட்டத்தைச் செயல்படுத்த முடிவெடுத்தது. மூன்ருவது திட்டகால ஆரம்பத்தில், அனைவர்க்கும் கல்வியறிவு வழங்கும் விசேஷத் திட்டமொன்றைத்

துவக்கி அமோக வெற்றியும் கண்டது. அதிக அளவிலான மாணவர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அதிக அளவில் ஆரம்பப்பள்ளிகள் துவக்கப்பட்டன. 1957-ஆம் ஆண்டின் இறுதியில் 51,386 மாணவர்களைக்கொண்ட 237 ஆரம்பப்பள்ளிகள் இருந்தன.

1954-ல் உயர் ஆரம்பக் கல்வி மட்டத்தில் 4038 ஆக இருந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை, பின்னர் 13,862 ஆக உயர்ந்தது. 1967 – 68-ல் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையும் 52 லிருந்து 85 ஆக உயர்ந்தது. இவ் வளர்ச்சி மட்டுமன்றி, செயல்பட்டுவந்த உயர் ஆரம்பப்பள்ளிகளில் பல அதிகப்படியான வகுப்புகளும் அதிக அளவில் தேவையை ஒட்டித் திறக்கப்பட்டன.

ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்கள், சிலேட்டுகள், இதர எழுதவுதவும் சாதனங்கள் ஆகியவை வழங்கும் திட்டம் ஒன்று, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் அதையடுத்துவந்த வருடாந்தரத் திட்ட காலங்களிலும் செயல்படுத்தப்பட்டது. 1967 – 68-ஆம் ஆண்டில் அரசினர் பள்ளிகளில் மூன்ருவது வகுப்புவரை பயிலும் மொத்தம் 15,840 குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைந்தனர்.

இலவச மதிய உணவு வழங்கும் முறை இணைப்பின்போதும் வழக்கத்தில் இருந்தது. ஆனால் அது குறைந்த அளவிலும், குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. 1954-ல் ரூ. 50,000 செலவில் 3,928 மாணவர்களுக்குப் பயன்பட்ட மதிய உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 1967 – 68-ஆம் ஆண்டில் ரூ. 9.25 லட்சம் செலவில் 31,200 குழந்தைகளுக்குப் பயன்பட்டது.

உயர்நிலைக் கல்வி

இணைப்பின்போது உயர்நிலைக்கல்வி பிரெஞ்சு முறை பாடத்திட்டத்தின் அடிப்படையில் பிரெஞ்சு அல்லது தமிழ்மொழிகளில் அமைந்திருந்தது. சென்னைச் சர்வகலாசாலையின் மெட்ரிகுலேஷன் தேர்வுக்குத் தயார் செய்யும் வகையில் ஆங்கிலப் பாடத்திட்டத்தைக்

கொண்டு ஒருசில பள்ளிகளும் இங்கு இயங்கி வந்தன. 1,483 மாணவர்களைக்கொண்ட 16 உயர் நிலைப்பள்ளிகள் அப்போது இயங்கி வந்தன. இணைப்பிற்குப்பிறகு பாடத்திட்டங்களில் ஆங்கிலமும், மாநில மொழிகளும் பிரதான இடம் பெற்ற பல உயர்நிலைப்பள்ளிகள் இம்மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் திறக்கப்பட்டன. அதிகப்படியாக பள்ளிகள் திறக்கப்பட்டதன் விளைவாக 1967 – 68-ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 41-ஆகவும், பயனடையும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை 5389-ஆகவும் உயர்ந்தது.

பெண்கள் கல்வி

இணைப்பிற்குப் பிறகு பெண்கள் கல்வியில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு, அதன்பயனாக கல்விகற்கும் மாணவிகளின் எண்ணிக்கை இணைப்பின்போது இருந்ததைக் காட்டிலும் நான்கு மடங்காகப் பெருகியது.

உயர்நிலைக் கல்விவரை பெண்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் தகுதி உபகாரச் சம்பளம், ஆஜர் உபகாரச்சம்பளம் போன்றவற்றையும் பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு வழங்கப்பட்டன. அதிக அளவில் பெண்களைப் பள்ளிகளில் சேர்க்கும்பொருட்டு கிராமப்புறப் பள்ளிகளில் ஆசிரியைகள் அமர்த்தப்பட்டனர்.

கல்லூரிக் கல்வி

இணைப்பின்போது பாரிஸ் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்ட இரண்டு கல்லூரிகள் மட்டும் இங்கு இருந்தன. பிரெஞ்சு மொழியைப் பாடத்திட்டமாகக்கொண்ட இக்கல்லூரிகளில் 188 மாணவர்கள் மட்டும் படித்து வந்தனர்.

மூன்றாவது திட்டகாலத்தின் முதல் ஆண்டில், புதுவையில் சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்ட ஒரு கலைக்கல்லூரி துவக்கப்பட்டது. இக்கல்லூரி 1965 – 66-ல் பிரெஞ்சுமொழியில் எம். ஏ. வகுப்பைத் துவக்கி மேல்-பட்டப்படிப்புக் கல்லூரியாக உயர்த்தப்பட்டது. 1967 – 68-ல் புகுமுக வகுப்

புக்களுடன் மற்றுமொரு கலைக்கல்லூரி காரைக்காலில் திறக்கப்பட்டது. அண்மையில் புதுவையில் பெண்கள் கல்லூரி ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக் கல்வி

1961-ஆம் ஆண்டில் புதுவையில் திறக்கப்பட்ட மோதிலால்நேரு பாலிடெக்னிக் இம்மாநிலத்தின் தொழில் நுட்பக் கல்வியின் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இது ஆண்டுதோறும் 120 மாணவர்களுக்கு சிவில், மெக்கானிக்கல் மற்றும் எலெக்ட்ரிகல் என்ஜினீயரிங் ஆகிய பிரிவுகளில் டிப்ளோமா வகுப்புகளை நடத்தி வருகிறது.

இணைப்பிற்குமுன், கலை மற்றும் கைத்தொழில் பள்ளி ஒன்று தொழில் நுணுக்கக் கல்வி அளித்துவரும் ஸ்தாபனமாக இங்கு பணியாற்றி வந்தது. 1966 – 67-ஆம் ஆண்டில் இப்பள்ளி பொதுக்கல்வியையும், தொழில் நுட்பப் பயிற்சியையும் அளிக்கும் வகையில் ஜூனியர் தொழில் நுட்பப்பள்ளியாக மாற்றியமைக்கப்பட்டது. 60 மாணவர்கள் கல்வி கற்பதற்கு இங்கு வசதியுள்ளது.

பொருளாதார வசதிக்குறைவாலும், ஆரம்பக் கல்விக்குப்பிறகு படிப்பு அவசியமில்லை என்ற ஆர்வக் குறைவாலும் கல்வி பயிலாமல் உள்ள 11-லிருந்து 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஆதாரத்தொழிற் கல்வி பயில வசதியளிக்கும்பொருட்டு 1964-ஆம் ஆண்டிலும் 1965-ஆம் ஆண்டிலும் நகரை அடுத்துள்ள பகுதிகளில் நான்கு ஆரம்பத் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஐக்கிய நாடுகளின் 'யூனிசெப்' நிறுவனம் தேவையான கருவிகளை இந்நிலையங்களுக்கு வழங்கியது. 1967 – 68-ஆம் ஆண்டில் இந்நான்கு நிலையங்களிலும் மொத்தம் 224 மாணவர்கள் பயின்று வந்தனர்.

கல்விச் சலுகை மற்றும் உபகாரச் சம்பளத் திட்டம்

நடுத்தரக்கல்விவரை எல்லா மாணவர்கட்கும், உயர்நிலைக்கல்விவரை பெண்களுக்கும்

கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆசிரியர்களின் குழந்தைகட்கும் மற்றும் அரசிதழ்ப் பதிவுபெருத ஊழியர், குறைந்த வருவானமுள்ளவர், ராணுவ ஊழியர், ஹரிஜனங்கள் ஆகியோரின் குழந்தைகட்கும் எல்லா அரசாங்க உயர்நிலைப்பள்ளிகளிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. கல்லூரி மற்றும் தொழிற்படிப்பை மேற்கொள்ளும் வகையில் தகுதியுள்ள ஏழை மாணவர்களுக்கு இம்மாநிலத்தில் பல்வேறு உபகாரச் சம்பளத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

ஊனமடைந்தோர்க்குச் சிறப்புக் கல்வி

'பிரெய்ல்' முறையில் பயிற்றுவிக்கும் நிறுவனம் ஒன்று 1963 – 64-ல் பார்வையற்ற குழந்தைகளுக்கென ஆரம்பிக்கப்பட்டது. 1964-65-ஆம் ஆண்டில் செவிடு மற்றும் ஊமைகளுக்கான கல்வி நிலையம் ஒன்றும் திறக்கப்பட்டது. மாணவர்களுக்குப் படிப்பு, உணவு, தங்குமிடம் யாவும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

இணைப்பிற்குப்பிறகு கல்வித்துறையில் இத்தகைய வசதிகளுடன், புதுவை மாநிலம் வேகமாகவும் சீரான முறையிலும் முன்னேற்றமடைந்ததோடுமட்டுமல்லாமல் கல்வி பயில்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையிலும், கல்வியின் தரத்தைப் பொறுத்தவரையிலும்கூட பெருமைப்படத்தக்க சாதனைகளை அடைந்துள்ளது.

மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம்

புதுவை பாரதத்தோடு இணைந்தபோது, இதன் ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒவ்வொரு மருத்துவமனையும், கிராமப் பகுதிகளில் ஒருசில மருத்துவ நிலையங்களும் மட்டுமே இருந்தன. இம்மருத்துவ நிலையங்கள் சிறிய அளவிலான வசதிகளைமட்டும் பெற்றிருந்தமையால், நகர்ப்புற வாசிகளின் தேவைகளைமட்டும் பூர்த்தி செய்யக்கூடியவையாக இருந்தன. கிராமப்புற மக்களுக்குக் குறைந்த அளவிலான மருத்துவ வசதிகள் மட்டுமே கிட்டிவந்தன. எனவே, மருத்துவப் பிரச்சினைகளை அவற்றால் போதுமான அளவு சமாளிக்க முடியவில்லை.

இணைப்பிற்குப் பின்னர், இந்தியாவின் ஏனையபகுதிகளில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருந்த பல்வேறு மருத்துவத் திட்டங்களை இங்கும் செயல்படுத்த முயற்சிமேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர், மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகிய துறைகளில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டது.

அப்போது, எல்லாவிதமான மருத்துவ நடவடிக்கைகளுக்கும் முக்கிய கேந்திரமாக விளங்கிய புதுவைப் பொது மருத்துவமனையின் சீரமைப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு, பல கட்டங்களில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 12.30 லட்சம் செலவில் 126 படுக்கை வசதி கொண்ட புதிய கட்டிடப் பிரிவு ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. இதன் விளைவாக, அறுவைச்சிகிச்சை, குழந்தை வைத்தியம் போன்ற பல பிரிவைச் சேர்ந்த, சிகிச்சைகளுக்கென, வேவ்வேறு பிரிவுகளை ஒதுக்குவதற்கு வசதி ஏற்பட்டது. இப்பிரிவுகளில் எல்லாவற்றிற்கும் தேவையான தேர்ந்த மருத்துவர்கள் அமர்த்தப்பட்டதோடு, நகர்ப்புறம் மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு

முன்பிருந்ததைவிட சிறந்த மருத்துவ வசதிகளை வழங்க முடிந்தது.

புதுவையிலுள்ள பொது மருத்துவ மனையின் செயல்திறனை அதிகரிக்கும்பொருட்டு, நவீனக் கருவிகள் அடங்கிய எக்ஸ்ரே நிலையம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. இதுபோலவே, ஏனைய வட்டாரங்களிலுள்ள மருத்துவமனைகளிலும் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1954-ஆம் ஆண்டு புதுவை மாநிலத்திலிருந்த மருத்துவ மனைகளில் ஒரு குறிப்பிட்ட அளவு படுக்கை வசதி மட்டுமே இருந்தது. மேற்கொண்டு கட்டிடப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டதன் விளைவாகவும், பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொண்டதன் விளைவாகவும் படுக்கை வசதிகள் தற்போது அதிகரித்துள்ளன. மாதர்களுக்கு ஏற்படும் நோய்களைப் பிரத்தியேகமாகக் கவனிப்பதற்கென தனிப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. மகப்பேறு மருத்துவமனையில் அறுவைச்சிகிச்சை நிலையம் ஒன்று நிர்மாணிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. அது செயல்படத் துவங்கியதும், அவசரமாகக் கண்காணிக்கப்படவேண்டிய நோயாளிகளுக்கு, மகப்பேறு மருத்துவமனையிலேயே சிகிச்சை செய்வதற்கு வசதியளிக்கும்.

மேலும் பல மகப்பேறு மற்றும் குழந்தை நல நிலையங்களும், மகப்பேற்றுக்கான வசதிகளுடன்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் கிராமப்புறங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதன் விளைவாக, கிராமப் பகுதிகளில் தகுந்த மகப்பேற்றுக்கான வசதிகள் இப்போது கிடைத்துவருகின்றன.

1954-ஆம் ஆண்டிற்கு முன்னரும்கூட பொதுமக்களுக்கு இலவச மருத்துவ வசதி கிடைத்துவந்தது என்பது உண்மையே. எனினும், போதுமான அளவு இவ்வசதி கிடைத்து வந்தது என்று கூற இயலாது. அதுமட்டுமின்றி, நெடுந்தொலைவிலுள்ள ஏழை மக்களுக்குப் பொது மருத்துவ மனைகளை நாடிச் செல்லவும் முடியாமலிருந்தது. இப்போது எல்லா மருத்துவ மனைகளும், மருத்துவ வசதி

தேவைப்படுகின்ற அனைவருக்கும் இலவச மான மருத்துவ வசதிகளை அளித்து வருகின் றன. மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிக் கப்படுகின்ற நோயாளிகளுக்கு, அதிக விலை யுள்ள உயர்ந்த மருந்துகளும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன.

தேர்ந்த மருத்துவர்கள் இங்கு அதிகம் தேவைப்படுகிறதெனில் அது மிகையாகாது. 'உள்ளூர் மருத்துவர்' (Medecin Local) என்று கூறப்பட்ட ஒருதரப்பட்ட மருத்துவர் களைப் பயிற்றுவிப்பதற்கென இணைப்பிற்கு முன்னர் 'மருத்துவப்பள்ளி' ஒன்று இங்கு இருந்தது. இப்பள்ளியே, மருத்துவச்சியரை யும், செவிலியரையும் பயிற்றுவிக்கும் பொறுப் பேற்றிருந்தது. பல்வேறு மருத்துவத் திட் டங்களை முறைப்படி செயலாற்றி வந்ததன் விளைவாக மருத்துவர்கள் மற்றும் மருத்துவச் சிப்பந்திகளின் தேவையும் அதிகரித்துக் கொண்டே வந்தது. இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், பிற இந்தியப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மருத்துவக் கல்லூரி களில் அளிக்கப்பட்டுவந்த மருத்துவக் கல் விக்கு இணையான கல்வியை இங்கும் அளிக் கும் பொருட்டு, முற்றிலும் மத்திய அரசின ரால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரி ஒன்று இங்கு ஆரம்பிக்கப்பட்டது. அம்மருத்துவக் கல்லூரி உயர் மருத்துவக்கல்வியளிக்கும் வகையில் பின்னர் உயர்த்தப்பட்டது. இதுவே ஜவாஹர்லால் உயர் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என அழைக்கப்படும் 'ஜிப்மர்'. இது இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இதனுடன், பல நவீன வசதி களுடன் கூடிய மருத்துவமனை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. மருத்துவர்களுக்கு இருந்த தேவை பெருமளவுக்கு இன்று ஈடு கட்டப்பட்டுள்ளது. புதுவை மருத்துவ மனை யில், செவிலியர் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப் பட்டதன் விளைவாக, தேர்ந்த செவிலியர்கள் கிடைப்பதில் இருந்த சிரமமும் பெருமளவு குறைந்துள்ளது. இப்பள்ளி சென்னையிலுள்ள செவிலியர் சங்கத்தோடு இணைக்கப்பட்டுள் ளது.

மூன்றாவதுத் திட்டகாலத்தில் பன்னிரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்

பட்டன். அவற்றுள் ஒன்று 'ஜிப்மர்' மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்டு கிராமச் சுகாதார நிலையமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கிராமங்களிலுள்ள மக்களின் மருத்துவத் தேவைகளை, மிக அண்மையில் அமைந்துள்ள இத்தகைய மருத்துவ நிலையங்களில் பணிபுரியும் தேர்ந்த மருத்துவர்கள் கவனித்து வருகின்றனர். இவ்வாறாக, இம்மாநிலத்தின் மூலைமுடுக்குகளிலுள்ள கிராமப் பகுதிகளுக்கும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற முக்கிய குறிக்கோள் நிறைவேறியிருக்கிறது. பொது மருத்துவ மனையோடு இணைக்கப்பட்டுள்ள குழந்தை நலக் கேந்திரம் தவிர, பிரத்தியேக குழந்தைநலக் கேந்திரங்களும் இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு உடனடியான நோய்த் தடுப்பு வசதிகள் செய்யப்படுகின்றன. குழந்தைகளுக்கு பி. ஸி. ஜி., அம்மை, மும்முனைப் பாதுகாப்பு ஆகிய நோய்த்தடுப்பு ஊசி போடுதல், இளம்பிள்ளை வாதத்திற்குச் சிகிச்சையளித்தல் போன்ற நவீன மருத்துவ வசதிகளும் கிடைத்து வருகின்றன.

1954-ஆம் ஆண்டில், காசநோய் போன்ற தொத்து நோய்களுக்குச் சிகிச்சை யளிப்பதற்கென பிரத்தியேக வசதிகள் இங்கு இல்லை. புதுவையிலுள்ள காச நோயாளிகள் அண்டை மாநிலங்களிலுள்ள மருத்துவ மனைகளை நாடிச் செல்ல வேண்டியிருந்தது. இணைப்பிற்குப் பின்னர், புதுவையில் 110 படுக்கைகள் கொண்ட காச நோய் மருத்துவமனையும், காரைக்காலில் ஒரு துணை நிலையத்தோடுகூடிய காச நோய் சிகிச்சை நிலையமும் ஆரம்பிக்கப் பட்டன. காச நோய் ஒழிப்புக்கான பி. ஸி. ஜி. ஊசிபோடும் இயக்கமும் செயல்படுத்தப்பட்டு, இம்மாநிலத்திலுள்ள மக்களுக்குப் பரவலாகத் தடுப்பு ஊசி குத்தப்பட்டது.

யானைக்கால் நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, யானைக்கால் நோய் கட்டுப்பாடு அணி ஒன்று இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இரவு நேரப் பரிசோதனைகளை நடத்துவதும் தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளில் நோயைப் பரப்பும் கொசுக்களை ஒழிப்பதற்காக, அதற்குறிய மருந்து தெளிக்கும் பணி

களை மேற்கொள்வதும் இவ்வணியின் பணியாகும்.

புதுவை இந்தியாவோடு இணைந்தபோது, 130 படுக்கைகள் கொண்ட தொழு நோய் மருத்துவமனையொன்று இங்கிருந்தபோதிலும், 1961-ஆம் ஆண்டுவரை, இத்தகைய நோயாளிகளின் பிரச்சினைகளை கண ்காணிப்பதற்கென பிரத்தியேக பணியாட்கள் எவருமிருக்கவில்லை. இங்கு நடத்தப்பட்ட ஒரு புள்ளி விவரக் கணக்கிலிருந்து, இப்பகுதியில் இந் நோய் பரவலாக இருப்பது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டமொன்று இங்கு துவக்கப்பட்டது. இம்மாநிலத்திலுள்ள எல்லா மக்களையும் பரிசோதித்தறிந்து, நோயிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டோரை சிகிச்சை பெறச் செய்வதற்குக் கொணரும் பொருட்டு இது காறும் பத்தொன்பது கேந்திரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அம்மை நோய் ஒழிப்புத்திட்டம், மலேரியா ஒழிப்புத்திட்டம் ஆகியவை இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்ட வேறு சில அகில இந்தியத் திட்டங்களாகும்.

குடும்ப நலத்திட்டமானது அரசினரின் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, இம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டது. மாநில குடும்ப நலத்திட்ட அலுவலகமும், அத்தோடு இணைக்கப்பட்டுள்ள பல நிலையங்களும், இத் துறையில் மிகச் சிறப்பான பணியாற்றியுள்ளன. பள்ளி செல்லும் குழந்தைகளின் உடல் நலனைப் பேணுவதற்குரிய முக்கியமான திட்டமொன்றும் 1954-ஆம் ஆண்டிற்குப் பின்னர் இம்மாநிலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 65,000 குழந்தைகள் பலன் அடைந்துள்ளனர்.

இன்று இம்மாநிலத்தில், 3,900 பேருக்கு ஒரு டாக்டர் வீதமும் , 370 பேருக்கு மருத்துவ மனையில் ஒரு படுக்கை வீதமும் வசதிகள் இருக்கின்றன. இத்தகைய வசதி இந்தியாவில் வேறெங்குமில்லை எனலாம். இன்று இம் மாநிலத்தில் கிடைத்துவரும் வசதி முன்னேற்றமடைந்த நாடுகளில் கிடைத்து வருகின்ற வசதிக்கு இணையாக அமைந்துள்ளது எனில் அது மிகையாகாது.

தொழிலாளர் நலம்

பிரெஞ்சு நிர்வாகத்தின்போது தொழிலாளர் நலத்திட்டங்கள் என்றால் என்ன என்பதே புதுவை வாசிகளுக்குத் தெரியாதிருந்தது. இணைப்பிற்குப் பிறகுதான் பல்வேறு தொழிலாளர் நலத்திட்ட நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன.

தொழிலாளர் நலக்கேந்திரங்கள், குழந்தைகள் நலக் கேந்திரங்கள், இலவச தையல் இயந்திர விநியோகத் திட்டம், தொழிற் பயிற்சித் திட்டங்கள், அப்ரென்டிஸ்களுக்கான பயிற்சித்திட்டங்கள் மற்றும் கேள்வி காட்சி விளம்பரத்திட்டங்கள் ஆகியவை இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்ட தொழிலாளர் நலத்திட்டங்களாகும்.

புதுவை மாநிலத்தில் முதலியார்பேட்டை, காந்தி நகர், அரியாங்குப்பம் ஆகிய இடங்களிலும், காரைக்காலிலும் ஆக நான்கு தொழிலாளர் நலக்கேந்திரங்களும் நான்கு குழந்தைகள் நலக்கேந்திரங்களும் இயங்கி வருகின்றன. இக்கேந்திரங்களனைத்தும் நூல் நிலையம், தையல் பிரிவு, விளையாட்டுப் பிரிவு, கைத்தொழில் முதலியவற்றைப் பெற்றிருக்கின்றன. இவற்றில் வானொலிப் பெட்டிகளும் பொருத்தப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களும், அவர்கள் குடும்பத்தினரும் தங்களுக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தின்போது இந்நிலையங்களுக்கு அதிக அளவில் வந்து நூல் நிலையங்களிலுள்ள புத்தகங்கள் மற்றும் பத்திரிக்கைகளைப் படித்தும் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டும், விளையாட்டுகளில் பங்கு கொண்டும் பயனடைகின்றனர். பெண்களுக்குத் தையற் கலைப் பயிற்சியும் இவற்றில் அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தைகள் நலக்கேந்திரத்திலும் கிட்டத்தட்ட 60 குழந்தைகள் சேர்க்கப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகின்றனர். தொழிலாளர்கள் தம் குழந்தைகளை இத்

தங்கைய கேந்திரங்களில், அவர்கள் வேலைக்குச் செல்லும்போது விட்டுச் செல்கின்றனர். அங்கு அக்குழந்தைகளுக்குப் பால், ரொட்டி. பிஸ்கட் முதலிய உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. வயதுவந்த குழந்தைகளுக்குப் பாடங்களும் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன.

இலவச தையல் இயந்திர விநியோகத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கேந்திரத்திலும் பத்து நபர்கள் சேர்க்கப்பட்டு ஆறுமாதத்திற்குத் தையற்பயிற்சி அளிக்கப்படுகின்றனர். பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாமாதம் ரூ. 25/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. பயிற்சிக்காலம் முடிந்தபிறகு அவர்களுக்கு நடத்தப்படும் தேர்வில் வெற்றிபெறும் முதல் ஏழு நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு தையல் இயந்திரம் இலவசமாக வழங்கப்படுகிறது. வருவாயைக் கூடுதலாக்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள இவ்வியந்திரங்கள் அவர்களுக்கு உதவும். 1967 – 68-ல் இத்திட்டத்திற்காக ரூ. 29,387 செலவிடப்பட்டது. 1968-ஆம் ஆண்டு மார்ச் மாதம்வரை எல்லாக்கேந்திரங்களிலுமாக 163 தையல் இயந்திரகள் இவ்வாறு வழங்கப்பட்டன.

தொழில் நுட்பப் பயிற்சித்திட்டத்தின்கீழ் கடலூர், நாகப்பட்டினம், காக்கினடா, கண்ணனூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் முறையே புதுவை, காரைக்கால், மாஹே, ஏனம் ஆகிய பகுதிகளிலுள்ள பயிற்சியாளர்களுக்கு முறையான தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு முறையும் 48 இடங்கள் இவற்றிற்காக ஒதுக்கப்படுகின்றன. இங்கு அனுப்பப்படும் பயிற்சியாளர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ரூ. 45-ம் மற்றவர்களுக்கு ரூ. 25-ம் மாத உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. பயிற்சியின் பொருட்டு ஒவ்வொரு நபருக்கும் ஆகும் மாதச் செலவை (ரூ. 42/–) அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. இம்மாதிரியான தொழிற்கூடங்களில் டர்னர், பிட்டர் ஒயர்மேன், மெஷினிஸ்ட், தச்சு, வார்ப்படம், டிராப்ட்ஸ்மேன் (சிவில் மற்றும் மெக்கானிக்கல்) ரேடியோ மெக்கானிக் மற்றும் எலக்ட்ரீஷியன் முதலிய

பல்வேறு துறைகளில் பயிற்சியாளர்கள் பயிற்சி பெறுகின்றனர். 1967 – 68-வரை இத் திட்டத்தின்கீழ் மொத்தம் 261 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. 1967 – 68-ல் இத் திட்டத்திற்காக ரூ. 40,478/– செலவிடப் பட்டது.

முன்னூற்றுக்கும் அதிகமான தொழிலாளர் களைக் கொண்ட தொழில் நிறுவனங்களில், உபயோகிப்போர் கூட்டுறவுப் பண்டசாலை களைத்திறக்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள் ளது. 1968-ஆம் ஆண்டில் இத்தகைய மூன்று பண்டசாலைகள் இங்குள்ள இரண்டு நெசவாலைகளிலும், சர்க்கரை ஆலையிலும் திறக்கப் பட்டன. இதர பெரிய நிறுவனங்களிலும் இத்தகைய பண்டசாலைகளைத் திறக்க முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1968-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று 'அப்ரென்டிஸ்' களுக்கான பயிற்சித்திட்டம் செயல்படத்துவங்கியது. பயிற்சியாளர் சட் டம் 1961-ஐ அடிப்படையாகக் கொண்டு இத் திட்டம் செயலாற்றப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இத்திட்டத்தின்கீழ் 50 பயிற்சி யாளர்கள் பயிற்சி பெறுவார்கள் என்று மதிப் பிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் கல்வித்திட்டத்தின்படி, மத் திய அரசின் ஆதரவின்கீழ், தொழிலாளர் கல்விக்கான மத்திய போர்டு, உதவிப்பிராந் திய நிலையமொன்றைப் புதுவையில் 30-5-1965-ல் திறந்தது. தொழிலாளர்கள் சட்ட ஒழுங்கு நடைமுறைகளையும் தங்களது உரி மைகளையும் பொறுப்புகளையும் அறியும்படி செய்து, நாட்டிற்கும், தொழிலுக்கும் மற்றும் ஸ்தாபனங்களுக்கும் அவர்கள் ஆற்றவேண் டிய பொறுப்புகளை அறியச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1967 – 68-ஆம் ஆண்டு இறுதிவரை மொத்தம் 77 தொழிலா ளர் ஆசிரியர்களுக்கு நான்கு பயிற்சிப் பிரிவு களில், இந்த நிலையத்தில், பயிற்சியளிக் கப்பட்டது, அரசாங்க இலாக்காக்களிலும், தனியார் தொழில் ஸ்தாபனங்களிலும் நடத் தப்பட்ட வகுப்புகள் மூலமாக 3000 தொழி லாளர்கள் பயனடைந்தனர்.

இதைத்தவிர தொழில்துறையினரால் அடிக்கடி தொழிலாளர்கள் நிறைந்த பகுதிகளில் படக்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

11,000 தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மாநில தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின்கீழ் புதுவை, உழவர்கரை மற்றும் முதலியார்பேட்டைக் கொம்யூன்களில் மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன.

ஹரிஜன நலம்

இணைப்பிற்குப் பின்னரே, இங்கு ஹரிஜன நலத் துறையும் ஏற்படுத்தப்பட்டது. ஹரிஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்துவதற்கான திட்டப்பணிகளை மேற்கொள்ளுதல், அவர்களது கல்வி, சமூகப் பொருளாதார நிலைமைகளை மேம்பாடடையச் செய்தல் ஆகியவையே, ஹரிஜன நலத்திட்டங்கள் செயலாற்றப்படுவதின் நோக்கமாகும். இத்துறை ஏற்படுத்தப்பட்டபின்னர், இத்தகைய ஹரிஜன நலத்திட்டங்கள் பல இங்கு செயல்படுத்தப்பட்டன.

1963 – 64-ஆம் ஆண்டில், ஹரிஜன மாணவர்களுக்கான அரசாங்க விடுதியொன்று துவங்கப்பெற்றது. ஆரம்ப கட்டத்தில் 36 மாணவர்கள் அதில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1965 – 66-ஆம் ஆண்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்ட பின்னர், மேலும் நாற்பது மாணவர்களுக்கு இலவசமாகத் தங்குவதற்கும் உணவு அருந்துவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மூன்றாவதுத்திட்ட காலத்தில் நூற்று முப்பது மாணவர்கள் இதனால் பயனடைந்தனர். கூடியவிரைவில் ஹரிஜன மாணவர்களுக்கென மேலும் இரண்டு விடுதிகளும், ஹரிஜன மாணவியர்களுக்கென ஒரு விடுதியும் கட்டப்படவிருப்பதோடு, புதுவை மற்றும் காரைக்காலிலுள்ள விடுதிகள் மேலும் விஸ்தரிக்கப்படும்.

மெட்ரிக்குக்கு முந்திய மற்றும் பிந்திய படிப்பினை மேற்கொள்வதற்கென ஹரிஜன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்படுகின்றது. மெட்ரிக்குக்குப் பிற்பட்ட மேற்படிப்பிற்கான உபகாரச் சம்பளம் ஏனைய பிற்பட்ட வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது. 1967 – 68-ஆம் ஆண்டுவரையில் 5,095 மாணவர்கள் இவ்வுபகாரச் சம்பளத் திட்டங்களின் மூலம் பயனடைந்தனர்.

ஹரிஜனச் சிறுவர்கள் கல்வி கற்பதற்கென, சிலேட், பென்சில், பாட புத்தகம் மற்றும் ஏனைய எழுதுபொருட்கள் ஆகியவை அளிக்கப் பட்டு வருகின்றன. 1967 – 68-ஆம் ஆண்டு இறுதிவரை 47,287 ஹரிஜன மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்தனர். இந்த ஆண்டில் (1968 – 69) இத்தகைய வசதிகள் பொருளாதாரத்துறையில் பிற்பட்ட வகுப்பு களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அளிக்கப் படுகின்றன.

ஹரிஜன மாணவர்களுக்கு ஆடைகள் வழங் கும் திட்டத்தின்கீழ், 1967 – 68-ஆம் ஆண்டு இறுதிவரை பள்ளி செல்லும் 5,351 ஹரிஜன மாணவர்கட்கு ஆடைகள் வழங்கப்பட்டன.

விவசாயப் பணிகளை மேற்கொள்வதற்காக வும், குடிசைத் தொழில்களை ஆரம்பிப்பதற் காகவும், ஏழை ஹரிஜனங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டன. 1967 – 68-ஆம் ஆண்டு இறுதிவரை 4,718 ஹரிஜனக் குடும்பங்களுக்கு மண்வெட்டிகளும், கலப்பைகளும் வழங்கப்பட் டன. 659 குடும்பங்களுக்குத் தொழிற் கருவி கள் வழங்கப்பட்டன. தையல் வேலையிலும், நவீன முறையில் காலணி செய்வதிலும் ஹரி ஜனங்களுக்குத் தொழிற்பயிற்சி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மூன்றாவது திட்ட காலத்தில் மொத்தம் 151 நபர் களுக்கு இவ்விரண்டு தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர், காலணி செய்யும் பயிற்சித் திட்டம் கைவிடப்பட்டது. 1966 – 67 மற்றும் 1967 – 68-ஆம் ஆண்டுகளில் இருபத்தைந்து பயிற்சியாளர்களுக்கு தையற் கலைப்பயிற்சி அளிக்கப்பட்டு, நபர் ஒன்றுக்கு ஒவ்வொரு தையல் இயந்திரம் வழங்கப் பட்டது.

ஹரிஜனப் பகுதிகளில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, முடிந்தவரை யில் உயர்மட்ட நீர்த்தொட்டிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. 1967 – 68-ஆம் ஆண்டு இறுதிவரை 24 உயர்மட்ட நீர்த்தொட்டிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. ஹரிஜனக் கிராமங்களில் நல்ல குடிதண்ணீர் வழங்கும் பொருட்டு, 1967 – 68-ஆம் ஆண்டு இறுதிவரை ஹரிஜன நலத்துறை, 26 கிணறுகளைத்

தோண்டியுள்ளது. தண்ணீர்க் குழாய் விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் பல கைப்பம்புகள் போடப்பட்டதோடு, ஏழு கிணறுகளும் பழுது பார்க்கப்பட்டன.

வீடுகட்டும் திட்டத்தின்கீழ் குடியிருக்க வீடில்லாத 337 ஹரிஜனக் குடும்பத்தினருக்கு, அவர்கள் குடிசைகளைக் கட்டிக்கொள்வதற்கென மனைகள் அளிக்கப்பட்டன. பல்வேறு ஹரிஜனக் குடியிருப்புப் பகுதிகளில் 39 சமுதாய மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை நகர சுத்திகரிப்புத் தொழிலாளிகளின் குடும்பத்தினருக்கு 22 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

1967 – 68-ஆம் ஆண்டு இறுதிவரை மேற்சொன்ன திட்டங்களுக்காக ரூ. 20.60 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மத்திய அரசினரின் ஆதரவிலான திட்டமொன்றின் கீழ் மெட்ரிக்குக்கு மேற்பட்ட கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தகுதி உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. இதுவரை, 241 மாணவர்கள் இதனால் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கென 1967 – 68-ஆம் ஆண்டு இறுதிவரை சுமார் ரூ. 1.50 லட்சம் செலவிடப்பட்டது.

சமூக நலம்

புதுவையில் சமூக நலப்பணி, இணைப்பிற்கு முன்னர் ஒழுங்கான முறையில் செயல்படுத்தப் படவில்லை. சமூக நலப்பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒரு முக்கிய பிரதிநிதியாக விளங்கி வரும் மாநில சமூக நல ஆலோசனைக் குழு 1955-ஆம் ஆண்டில்தான் அமைக்கப்பட்டது. இந்தக் குழுவுடன் இரண்டு க்ஷேமநல விஸ்தரிப்புத் திட்டங்கள் இணைக்கப்பட்டன. க்ஷேம நலப்பணிகளை ஒழுங்கான முறையில் செயல்படுத்துவதற்காக பல சேவா நிலையங்களுக்கு மான்ய உதவி என்ற வடிவத்தில் நிதிவசதி அளிக்கப்பட்டது. சமூக நலத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கென ஒரு சமூக நலத்துறை, மூன்றாவதுத் திட்ட காலத்தில், குறிப்பாக ஏப்ரல் 1964-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென மூன்றாவதுத் திட்டத்தில் ரூ. 4.05 லட்சம் செலவு செய்யப்பட்டது.

பெண்களுக்கான பணிமனை

இப்பணி மனையானது நிராதரவான பெண்களுக்கும் மற்றும் விதவைகளுக்கும் புனர்வாழ்வளிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அக்டோபர் 1964-ல் இயங்கத் துவங்கிய இதில் 29 பெண்களும் 17 சிறுவர்களும் இருந்தனர். இந்த எண்ணிக்கை முறையே 1967 – 68-ல் 50 ஆகவும் 35 ஆகவும் உயர்ந்தது. இதிலுள்ள பெண்களுக்கு இ. எஸ். எல். சி. வரை ஆதாரக்கல்வியும், பின்னல், பூவேலை, தையல் முதலிய தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. 1967 – 68-ஆம் ஆண்டின் இறுதிவரை இதற்காக ரூ. 1.10 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் நல நிருபணத் திட்டம்

ஆகஸ்டு 1955-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 5 வயதுவரையுள்ள குழந்தைகளின் நலம் பேணுவதைக் குறிக்கோளாகக் கொண்டது. இதிலுள்ள பாலசேவகிகள் குடும்ப வரவு-செலவு, கோழி வளர்ப்பு, குடும்ப நலத் திட்டம் மற்றும் சத்துணவு ஆகியவற்றைக் கிராமப்புற இளந்தாய்மார்களுக்குப் போதிக்கின்றனர். இத்திட்டம், 1967-நவம்பர் முதல் குடும்பம் மற்றும் குழந்தை நலத்திட்டமாக மலர்ந்தது. இதற்காக 1967 – 68-வரை ரூ. 1.31 லட்சம் செலவிடப்பட்டது.

கண்காணிப்பு இல்லம் மற்றும் சிறப்புப் பள்ளி

1967-பிப்ரவரி மாதத்தில் 25 சிறுவர்களைக் கொண்டு இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. 1968 – 69-ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 50-ஆக உயர்ந்தது. குழந்தைகளுக்கான நீதி மன்றத்தில், தவறிழைத்தவர்களாகத் தீர்ப்புக் கூறப்பட்ட இளங் குற்றவாளிகள், இவ்வில்லத்தில் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். இதிலுள்ள குற்றவாளிகள் தங்களுடைய விடுதலைக்குப்பிறகும் ஏதாவது ஒரு தொழிலை சுயமான முறையில் மேற்கொள்ளும் வகையில் இவர்களுக்குத் தோட்டவேலை, கோழி வளர்ப்பு, நெசவு ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1967 – 68-ல் இளங் குற்றவாளிகளை ஆரம்ப விசாரணை செய்வதற்கும் நடத்தைகளைக் கண்காணிப்பதற்கும் ஒரு நடத்தை கண்காணிப்பு நிலையம் (Probation Unit) ஆரம்பிக்கப்பட்டது. இவற்றிற்காக 1967 – 68 வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 0.35 லட்சம்.

குழந்தை இல்லம் மற்றும் பால்வாடிகள்

புதுவையிலும் காரையிலும் தற்பொழுது 10 பால்வாடிகள் இயங்கி வருகின்றன. இந்த பால்வாடிகள் கிராமப்புறங்களில் இரண்டு முதல் ஐந்து வயதுவரை உள்ள குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்கின்றன. இவற்றிலுள்ள பாலசேவகிகள் மாதம் இருமுறை

இளந்தாய்மார்களை ஒன்றுசேர்த்து குடும்ப வரவு செலவு, குடும்ப நலத்திட்டம், குழந்தை வளர்ப்பு முதலியவற்றைப் போதிக்கின்றனர். புதுவையிலுள்ள குழந்தை நலக் கவுன்சிலுக்கு ஏழு குழந்தை இல்லங்களையும் பால்வாடிகளையும் நடத்துவதற்காக மான்யம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1967-68-ஆம் ஆண்டு இறுதிவரை ரூ. 1.16 லட்சம் செலவிடப்பட்டது.

இந்தச் சமூக நலத்துறை ஏழைச் சிறுவர்களுக்குச் செயற்கை உறுப்புச் சாதனங்கள் இலவசமாக வழங்குவதோடல்லாமல் பணிமனையிலிருந்து வெளிவரும் பெண்களுக்கும் அவர்களது புனர்வாழ்விற்காக தையல் இயந்திரங்களையும் வழங்கி வருகிறது. புதுவைச் சிறைச்சாலையிலுள்ள குற்றவாளிகளுக்கு பிரம்பு வேலை மற்றும் தையற்தொழிலில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாநில சமூக நல ஆலோசனைக்குழு, தாம் ஒருங்கிணைந்த க்ஷேம நல விஸ்தரிப்புத் திட்டங்களையும் குடும்பம் மற்றும் குழந்தை நலத் திட்டங்களையும் நடத்தி வருவதற்காகவும் பாரத் சேவக் சமாஜம், தாம் நகரம் மற்றும் கிராம லோக் காரிய க்ஷேத்திரங்கள் மற்றும் தேசிய நுகர்வோர் சேவை ஸ்தாபனங்கள் ஆகியவற்றை நடத்தி வருவதற்காகவும் மான்யம் வழங்கப்படுகிறது. 1967 – 68-ஆம் ஆண்டு இறுதிவரை ரூ. 2.13 லட்சம் மான்யமாக வழங்கப்பட்டது.

நான்காவது திட்டமானது சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் எல்லா மக்களுக்கும் இந்த சமூக நலப் பணிகளின் உதவி கிட்டும் அளவிற்கு வகுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

துறைமுகம்

புதுவையில் பிரெஞ்சுக்காரர்களுக்குப் பேருதவியாக இருந்துவந்த பழைய துறைமுகப் பாலம், 1952-ஆம் ஆண்டில் வீசிய கடும் புயலில் சேதமடைந்துவிட்டது. எனவே, 1957-ஆம் ஆண்டில் கடின சிமிட்டிக் கலவையினாலான 936 அடி நீளமுள்ள துறைமுகப் பாலத்தைக் கட்டும்பணி ரூ. 42 லட்சம் செலவில் துவக்கப்பட்டது. புதிய துறைமுகப் பாலம் கட்டி முடிக்கப்பட்டதன் விளைவாக, எல்லா நவீன வசதிகளையும் கொண்ட ஒரு துறைமுகத்தைப் பெறுகின்ற பேற்றினைப் புதுவை பெற்றது. 1966-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்வரை நாளொன்றுக்கு 250 டன் எடையுள்ள சரக்குகளைக் கையாள்வதற்குரிய திறன் மட்டும் படைத்திருந்த இத்துறைமுகம் 1967-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 1000 டன் எடையுள்ள சரக்குகளைக் கையாள்வதற்குரிய துறைமுகமாக விருத்தியடைந்தது. இதன் பலனாக, குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாகச் சரக்குகளை இறக்கிக் கப்பல்களை விடுவிப்பதன் வாயிலாக, பெருமளவிலான அந்நியச் செலாவணியை இத்துறைமுகம் ஈட்டிக் கொண்டிருக்கிறது. சரக்குகளைப் படகுகளிலிருந்து துறைமுகப் பாலத்தில் இறக்குவதற்கு மூன்று பாரந்தூக்கிகளும், மற்றும் மூன்று இடம்பெயரும் பாரந்தூக்கிகளும் பயன்படுத்தப்படுகின்றன. 100 டன் கொள்ளளவு எடையுள்ள எட்டுப் படகுகளை ஒரே நேரத்தில் இழுக்கும் சக்தி படைத்த 'சங்காரபரணி' என்னும் விசை இழுவைப் படகொன்று அண்மையில் இத்துறைமுகத்திற்கென வாங்கப்பட்டது. அதாவது, 1969-ஜனவரியில் இத்துறைமுகம் கையாளும் சரக்குகளின் எடையை 1000 டன்களுக்கும் அதிகப்படியாக உயர்த்துவதற்குத் துணையாயிருக்கும்பொருட்டு இவ்விழுவைப் படகு வாங்கப்பட்டது. இத்துறைமுகத்திற்கென, மேற்கொண்டு சில

இயந்திரங்களை வாங்குவதற்கும் ஏற்பாடாகி இருக்கிறது. இவை கிடைக்கப்பெற்றால், துறைமுகப் பாலத்திலிருந்து கிடங்குகளுக்குச் சரக்குகளை விரைவில் எடுத்துச் செல்வதற்குப் பெரிதும் உதவும். சரக்குகளைப் பேணிக்காப்பதற்கு அதிகப்படியான கிடங்கு வசதிகளும் செய்யப்படும்.

தற்போது இத்துறைமுகம் பெரும்பாலும் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கும் பஞ்சுக் கட்டுகளை ஏற்றுமதி செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. வருங்காலத்தில் இத்துறைமுகத்தில் உணவுப்பண்டங்களை இறக்குமதி செய்வதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நகர அமைப்பு

இம்மாநிலம் பாரதத்தோடு இணைந்த காலத்தில் இங்குள்ள நகரப் பகுதிகளின் முறையற்ற வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், சட்டதிட்ட வரம்பிற்குட்படுத்தவும் நகரமைப்புச் சட்டமோ, அல்லது ஒரு பிரத்தியேக நகரமைப்புத் துறையோ இங்கில்லை. பிரெஞ்சு சட்டதிட்டங்கள் முற்றிலும் பழைய காலத்தவையாதலால், தாறுமாறான நகர வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் வகையில் அவை அமையவில்லை. இதன் விளைவாக நகர்ப்புற வளர்ச்சியின் தரம் குன்றியதோடு, நகரம் கட்டுப்பாடற்ற வகையில் எல்லாத் திசைகளிலும் தாறுமாறாக வளர ஆரம்பித்தது. எனவேதான், புதுவையிலுள்ள நகரம் மற்றும் கிராமங்களின் சீரமைப்புத் திட்டங்களை விஞ்ஞான அடிப்படையில், அதன் பிற்கால வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருக்கும் வகையில் செயல்படுத்த, நகர அமைப்புத்துறை மூன்றாவது திட்டத்தின் இறுதிக்கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இத்துறையானது புதுவை நகருக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்குமாக, முழு அம்சத்திட்டம் ஒன்றைத் தயாரிக்க முனைந்துள்ளது. திட்ட அமைப்பு சம்பந்தமான புள்ளி விவரங்கள் சேகரித்தல், சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தல், அவற்றை ஆராய்ந்து விளக்கம் தருதல், ஆராய்ந்து கண்ட முடிவுகளை அளவுப்படங்கள் மற்றும் வரைபடங்கள் வடிவத்தில் விளக்குதல், நகர அமைப்புத் திட்டங்களை வரைதல், அத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்குத் துணையாக விளங்கும் எல்லாம் உள்ளடங்கிய சட்டமொன்றினை உருவாக்குதல் ஆகிய எல்லாப் பணிகளையும் இத்துறை செயலாற்றும். 1967 – 68-ஆம் ஆண்டில் புதுவை, முத்தியாலுப்பேட்டை மற்றும் புதுவைப் பகுதிகளிலுள்ள கிராமங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி, அவற்றின் சமூகப் பொருளாதார நிலை, குடியிருப்பு மற்றும் போக்குவரத்துக் கணிப்புகள் ஆகி

யவை செயலாற்றத்திற்கு எடுத்துக்கொள் ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன.

நகரத்தின் வருங்கால வளர்ச்சிபற்றி மக்க ளுக்கு அறிவுறுத்தும்பொருட்டு "உங்கள் நகரத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்" என்ற கண்காட்சி ஒன்றினை இத்துறை ஏற் பாடு செய்தது. நகரின் பிரச்னைகள், வளர்ச் சிக்குரிய வாய்ப்புகள் ஆகியவற்றை உளநூல் முறைப்படி புரிந்துகொண்டு முறையற்ற நகரின் வளர்ச்சியைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதன் அவசியத்தை உணரும் படிச் செய்ய இத்துறையானது மக்களைத் தயார்படுத்தியது. அதுமட்டுமல்லாமல் அவர் களின் நலனுக்கென உருவாக்கப்படுகின்ற திட் டங்களின் பயனை உணர்ந்து அவற்றின்பால் நாட்டங்கொள்ளவும் செய்தது.

அடிப்படைக் கணிப்புப்படங்களைத் தயாரிக் கும்பொருட்டும், புதுவை, முதலியார்பேட்டை, உழவர்கரை மற்றும் அரியாங்குப்பம் ஆகி யவை உள்ளடங்கிய, நகரமைப்பிற்கு உட்பட்ட நகரம் மற்றும் கிராமங்களில் பொறியியல் கணிப்புகளை நடத்தும் பொருட்டும், 1967-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வளர்ச்சிக் கணிப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

புதுவை நகரப்பகுதிக்கான இடைக்கால அபிவிருத்தித் திட்டமொன்று உருவாக்கப் பட்டு, 1968 மார்ச் மாதம் அரசின் அங்கீகாரத் திற்கென அனுப்பிவைக்கப்பட்டது. 1983-ஆம் ஆண்டில், அதாவது இன்னும் பதினைந்தாண்டு காலத்தில் புதுவை நகர வளர்ச்சி எத்தகைய தாயிருக்கும் என்பதை அனுமானித்து, நகரம் வளர வேண்டிய விதத்தைக் கருத்திற் கொண்டு, மக்கள் தொகை அன்று எந்த அளவு இருக்குமோ அதற்கேற்றாற்போல் 5,869 ஏக்கர் நிலப்பரப்பினை ஒதுக்கி வைத்து ஒரு திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 12,449 ஏக்கர் நிலப்பரப்பை இத்திட்டம் உள் ளடக்குகிறது.

இத்துறை, நகரம் மற்றும் கிராம அமைப்புக் கான சட்டத்தை உருவாக்கி அதனையும் அர சினரின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைத்

துள்ளது. இதற்கிடையில் மேலும் இத்துறை எல்லாம் உள்ளடங்கிய கட்டிட விதிகளையும் உருவாக்கி சம்பந்தப்பட்ட நகரமன்றங்களில், நகரமன்ற நடவடிக்கைகளை நிறைவேற்ற ஏற்றுக்கொள்ளும்பொருட்டு பல்வேறு கொம்யூன்களின் மேயர்களுக்கு அனுப்பிவைத்

துள்ளது. இடைக்காலத்தில் இவ்விதிகள் நகர அமைப்புப் பகுதியின் தாறுமாறான அபிவிருத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு, அடிப்படையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.